மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 9 / செப்டம்பர் 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## தமிழகத்தின் தங்கம்

## இளவேனில் வாலறிவன்

# Best Wishes

**D.Ann Damon Freeda, B.E.,**
Humble Hearts Living
Foundation-Director

**Pastor.M.SamChandru, M.Div.,**
Sharon Pentecostal Church
Founder





*Best Wishes
from
Humble
Hearts Living
Foundation
Trust
members....*

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly September 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
செய்தி ஆசிரியர்
**ம. வில்லியம் எபனேசர்**
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**ஜெயவேல்**
**க. பவானி** எம்.ஏ.,
**ஜான் ஜெயராமன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**அரவிந்த்**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**ஜோ.எஸ்தர்ரோஸ்லின்** பி.இ.,
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேசி: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

சரியும் இந்தியப் பொருளாதாரம் – தலையங்கம்........................................ 4

தீயில் கருகும் அமேசான் காடு
– க. பவானி.............................................................................................. 6

அங்கோர்வாட் கோயில் : கல்லிலே கலைவண்ணம்.............................. 7

இந்து மதம் பெயரின் வரலாறு
– பேரா. முனைவர் மு. தெய்வநாயகம்.................................................. 10

கவிதைகள்.................................................................................................. 12

இடஒதுக்கீடு : நேற்று இன்று நாளை
– மோகன் பகத்துக்கு பதில் சொல்லும் விவாத அரங்கம் .......................13

சிறந்த அரசுப்பள்ளிக்கான சுற்றுச்சூழல் விருது
– ஜான் ஜெயராமன்................................................................................ 14

காசுமீரத்திற்காக பதவி விலகிய ஐ.ஏ.எஸ். அதிகாரி----------------15

இரசாயனத்தின் பிடியிலிருந்து மீண்ட சிக்கிம் ........................................16

வீரத்தமிழர் முன்னணி மாயோன் பெருவிழா எடுப்பது
இந்துத்துவா அரசியலா?
இடும்பவனம் கார்த்தி............................................................................ 19

அணுஆயுதங்களை ஒழிப்போம்
– சுப உதயகுமாரன்................................................................................ 22

சமூக ஆர்வலர் பியூஸ் மனுஷ் மீது
சேலம் பா.ச.க.வினார் தாக்குதல்............................................................ 24

கைராசி வித்வான் டி.பி. எத்ராஜன்
– ஜி. இரமேஷ் ........................................................................................25

வாக்களர் சரிபார்ப்பு
– ஜெயவேல் ............................................................................................28

சோளகர் தொட்டி...................................................................................... 29

ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர்........................................ 31

தமிழகத்தின் தங்கம்................................................................................ 34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.
– *ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# சரியும் இந்திய பொருளாதாரம்

பொருளாதார வீழ்ச்சி பல துறைகளில் தாக்கத்தை எற்படுத்திக் கொண்டிருக்கின்றன. பங்குச் சந்தைகள் குறைந்து கொண்டிருக்கின்றன, முதலீடுகள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன.

புதிய முதலீடுகள் இல்லை என்ற நிலையில் இந்தியா காணப்படுகிறது.

இந்நிலையில், பொருளாதாரத்தின் அச்சாணி யாகத் திகழ்ந்து வரும் ரிசர்வ் வங்கியின் கையிருப்பில் உபரி யாக உள்ள ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தாறு லட்சம் கோடியை நடுவண் அரசுக்கு வழங்க ரிசர்வ் வங்கி வாரியக்குழு முடிவு செய்திருப்பது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

ரிசர்வ் வங்கியில் இருக்கும் உபரிப் பணம், அசாதாரண சூழல்களில் மட்டும் எடுத்தாளப்படும் என்று வங்கியிலாளர்கள் கூறுகிறார்கள். 1962ஆம் ஆண்டு நடந்த சீனாவுக்கும் நமக்குமான போரின் போதோ, 1965, 1971ஆம் ஆண்டு நடந்த பாகிஸ் தானுக்கும் நமக்குமான போரின்போதோ, அல்லது கொடிய பஞ்சங்கள், இயற்கை பேரழிவுகள் ஏற்பட்ட போதே, இந்தப் பணத்தை அப்போது நாட்டை ஆண்டவர்கள் எடுத்துப் பயன்படுத்தவில்லை என்பது முக்கியமாக நாம் நினைத்துப் பார்த்திட வேண்டிய ஒன்றாகும். இந்தியாவை ஆண்ட அரசுகள் எல்லாம், இந்தப் பணத்தை ஒரு புனிதமான சேமிப்பாகவே கருதி வந்தன.

ஒவ்வொரு ஆண்டும் டிவிடென்டை மட்டும் வாங்கிக் கொண்டு, முதலில் கை வைப்பதில்லை என்று விபரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். ரிசர்வ்



வங்கியின் ஆளுநர்களாக இருந்தவர்கள் இப்பணத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார்கள். ரகுராம்ராஜன் ஆளுநராக இருந்தபோது, இத்திட்டம் முன்னெடுக்கப் பட்டு அவரது அனுமதி கிடைக்காததால் கைவிடப் பட்ட தாகக் கூறுகிறார்கள். அதன் பின்னர் ரிலையன்ஸ் அம்பானியின் உறவினர் என்று சொல்லப் படுகிற உர்ஜித் பட்டீலை ஆளுநராக பாசக அரசு நியமித்தது. அதற்குக் காரணம் இந்தப் பணத்தை எடுப்பதற்காகவே என்று பேசப்பட்டது. ஆனால், நல் வாய்ப்பாக அந்த மனிதரும் இந்த வேலைக்கு அனுமதி தர மறுத்து ஆளுநர் பதவியை துச்சமென தூக்கி எறிந்து விட்டுச் சென்று விட்டார். ஆனால், தற்போது பாசக தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டுள் ளது.

அப்போதெல்லாம் இல்லாத நெருக்கடி இப்போது இருக்கிறதா? அப்படி இருந்தால் அதற்குக் காரணம் யார்? இதே பாசக அரசுதான் கடந்த ஐந்தாண்டிலும் ஆட்சி செலுத்தியது. நெருக்கடிகள் இல்லையெனில் எதற்காக இந்தப் பணம் எடுக்கப்படுகிறது என்ற கேள்விக் கணைகள் அரசை நோக்கிப் பாய்கின்றன. ஒருவேளை பாகிஸ்தானுடன் போர் நடத்த இப்பணம் பயன்படுத்தப்படுமோ என்ற கருத்தும் நிலவுகிறது.

அரசியல் கட்சிகள், பொருளாதார நிபுணர்கள், நாட்டின் நலன் விரும்பிகள் என்று பலரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதற்கிடையில் அனைத்து இந்திய வங்கி ஊழியர் கூட்டமைப்பும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்த நட வடிக்கை பொருளாதார நிலைப்புத் தன்மைக்கு பெரும் ஆபத்தாக முடியும் என அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் வெங்கடாசலம் எச்சரிக்கை விடுத்து உள்ளார். இது தொடர்பாக கூட்டமைப்பு உறுப்பினர் களுக்கு அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'ரிசர்வ் வங்கி என்பது முற்றிலும் தன்னாட்சி அமைப்பாகும். அதை நிதியமைச்சகம் அல்லது மத்திய அரசின் நீட்டிக் கப்பட்ட கிளையாக எதிர்பார்க்கக்கூடாது. ரிசர்வ் வங்கிக்கென தனிப்பட்ட செயல்பாடுகள் உண்டு. அதில் யாரும் தலையிடக்கூடாது. ஆனால் மத்திய அரசு ரிசர்வ் வங்கியை வெளிப்படையாக மண்டியிடச் செய்து, அரசின் நிதிப் பற்றாக்குறையை போக்குவதற் காக ரிசர்வ் வங்கியின் கையிருப்பைப் பெற முயல்கிறது.

நாட்டின் பொருளாதார நிலைமை கொந்தளிப் பான, மிகப்பெரும் மந்த நிலையை எதிர்கொண்டுவரும் வேளையில், அதைச் சீர்படுத்த நடவடிக்கை எடுப்பதற் குப் பதிலாக, பொருளாதார நிலைத் தன்மையை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவ தாக வெங்கடாச்சலம் குற்றம் சாட்டியுள்ள துடன், ரிசர்வ் வங்கியின் உபரி கையிருப்பு என தற்போது கூறப்படுவது, உண்மையான கையிருப்பு அல்ல, இதை தனியாகப் பிரித்தெடுக்க முடியாது என்று கூறியுள்ளார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து இலட்சம் கோடி டாலர் பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடாக இந்தியா வளர வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கிற நிலையில், இந்த பணம் எடுப்பு என்பது அந்த வளர்ச்சிக்கு மிகப்பெரிய முட்டுக் கட்டையாக இருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். நாடு எங்கே செல்கிறது? ●

## பொருளாதார தேக்க நிலை கவலை அளிக்கிறது முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன்!




இந்தியாவில் பல துறைகளின் உற்பத்தி குறைந்து வருவதால் பொருளாதாரத்தில் தேக்க நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தனியார் முதலீடுகளும் இந்தியாவில் குறைந்துள்ளது. அத்துடன் மத்திய அரசிடம் போதிய நிதி ஆதாரம் இல்லை, புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப் படாமல் உள்ளது. இந்நிலையில், பொருளாதார மந்தநிலை குறித்து ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் கருத்து தெரிவித்துள்ளார். அதில், இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி குறித்து பல தனியார் நிறுவனங்கள் கணித்துள்ளன என்றும் இந்த கணிப்பு மத்திய அரசின் கணிப்பைவிட மிகவும் குறைவாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு தொழில்களின் வளர்ச்சியில் நிலவும் மந்த நிலையை போக்க முக்கியமான சீர்த்திருத்தம் அவசியம் எனக்கூறியுள்ள ரகுராம் ராஜன், அதன் மூலம் தனியார் முதலீட்டை அதிகரிக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த நாட்களுக்குள் சலுகைகள் உள்ளிட்டவை வழங்க வேண்டும் என்றும் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சியை மிகைப்படுத்தி காட்டுவதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதனால், இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சியை கணிக்க புது முறையை கையாள வேண்டும் என்றும் தற்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலையும் 2008-ம் ஆண்டு ஏற்பட்ட தேக்க நிலையும் மிகவும் வேறுபட்டது என்றும் ரகுராம் ராஜன் கூறியுள்ளார்.



# தீயில் கருகும் அமேசான் காடு

**க.பவானி** எம்.ஏ.,

அமேசான் காடுகள் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. உலகத்தின் மேல் அக்கறை கொண்ட நல் உள்ளங்கள் அச்சத்தில் இருக்கின்றன. உலகத்தின் நுரையீரல் என்று சொல்லக்கூடியதும், உலகத்தில் உள்ள உயிர்க்காற்றில் இருபது விழுக்காடு உயிர்க் காற்றைத் தருவதுமான அமேசான் காடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. அக்காடுகள் உள்ள நாடுகள் எல்லாம் தீயை அழிக்க பெரும்பாடு பட்டுக் கொண்டிருக்கின்றன.

அமேசான் காடுகளின் பெரும்பாலான பகுதி, பிரேசிலில் இருந்தாலும் அண்டை நாடுகளாக பொலிவியா, கொலம்பியா உள்ளிட்ட எட்டு நாடுகளிலும் பரவியுள்ளது. இந்த நிலையில், அமேசானில் பற்றி எரியும் காட்டுத்தீயானது பொலிவியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சிகுய்தானியா பிராந்தியத்திலும் எரிந்து வருகிறது. பொலிவியா எல்லைக்குட்பட்ட அமேசான் காட்டுத்தீயில் கிட்டத்தட்ட 10 லட்சம் ஹெக்டேர் காடுகள் அழிந்து விட்டன.

இந்தக் காட்டுத்தீயை அணைக்க, பொலிவியா அரசு அமெரிக்காவிடம் இருந்து சூப்பர் டேங்கர் என்று அழைக்கப்படும் 'போயிங்747' விமானத்தை குத்தகைக்கு வாங்கி இருக்கிறது. மேலும் இரண்டாயிரம் தீ அழிப்பு வீரர்கள் காட்டுத் தீயை அழிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

பொலிவியா அதிபர் ஈவோ மெரேலஸ் சிகுய்தானியா பிராந்தித்துக்கு நேரில் சென்று, தீ அழிக்கும் பணிகளைப் பார்வையிட்டார். அப்போது, கவச ஆடைகளை அணிந்து கொண்டு அவரும் தீ அழிக்கும் பணியில் களம் இறங்கினார். அதனைத் தொடர்ந்து தீ அழிப்புத்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய ஈவோ மெரேலஸ், தீயணைப்பு பணி எந்த நிலையில் உள்ளது எனபது குறித்து கேட்டறிந்தார். சிகுய்தானியா பிராந்திய காட்டுத்தீயில் 90 விழுக் காடுக்கு அதிகமானவை அழிக்கப்பட்டு விட்டதாக ஈவோ மெரேலஸ் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்..

ஒருவர் செய்யும் செயலை, மற்றொருவர் அப்படியே செய்து காட்டும் போது அதனை ஈயடிச் சான் காப்பி என்று சொல்வது உண்டு.

தமிழகத்தின் சிற்பக்கலை, கலாச்சாரம், ஆன்மிகம், மொழி ஆகியவற்றில் தங்களது மனதைப் பறிகொடுத்த கம்போடிய மன்னர்கள், அவற்றைத் தங்கள் நாட்டில் அமல்படுத்திய போது, ஈயடிச்சான் காப்பி என்று இல்லாமல் தங்கள் கலாச்சாரத்துக்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொண்டனர் என்பது வியப்பான செய்தி.

தமிழகத்தில் பல்லவ மன்னர்கள் ஆட்சி செய்த நான்காம் நூற்றாண்டு காலம் முதல், ஏராளமான வணிகர்கள், தங்களது வாணிபநோக்கத்திற்காக தமிழ்நாட்டில் இருந்து கம்போடியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் தொடங்கினார்கள்.

அவர்கள் தமிழ்ர் சமய வழிபாட்டின் சிறப்புகளி னால் பல நன்மைகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை, தமிழகத்தில் இறைவனுக்காக கட்டப் பட்ட கோவில்கள் ஆகியவை பற்றிக் கேள்விப்பட்ட கம்போடிய மன்னர்கள், அவற்றைத் தங்கள் நாட்டிலும் நடைமுறைப்படுத்த விரும்பினார்கள்.

இதற்காக அவர்கள், தமிழகத்தில் இருந்து சிற்பக் கலைஞர்களையும் ஆன்மிகத் தலைவர்கள் போல் விளங்கிய அந்தணர்களையும் அதிக அளவில் கம்போடியாவுக்கு வரவழைத்து, அவர்கள் தங்கி இருந்து வாழ்க்கை நடத்த எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தனர்.

அவ்வாறு சென்றவர்கள் மூலம் தான் தமிழகத்தின் கலை, கலாச்சாரம், மொழி, ஆன்மிகம் ஆகியவை கம்போடியாவில் இறக்குமதி செய்யப்பட்டன.

நாடு பிடிக்கும் விருப்பமோ, தங்கள் கலாச்சாரத்தை அந்நிய தேசம் மீது திணிக்க வேண்டும் என்ற எண்ணமோ அப்போதைய தமிழக மன்னர்களிடம் கிஞ்சித்தும் இருக்கவில்லை. இதற்காக அவர்கள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

இவை அனைத்தும் கம்போடிய மன்னர்கள் தாங்களாகவே விரும்பி ஏற்றுக்கொண்டவை என்பதன் காரணமாகவே கம்போடியாவுக்குச் சென்ற தமிழ்க் கலாச்சாரம், ஆன்மிகம், மொழி ஆகியவை மிக ஆழமான முறையில் அங்கே வேர்கொண்டு வளர்ந்தன.

## அங்கோர் வாட் கோயில்

# கல்லிலே கலைவண்ணம்



இவற்றில், தமிழர் சமய வழிபாடு என்பது முக்கிய இடம் பிடித்து விட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே கம்போடியாவில் கலை அழகு மிக்க கோவில் கட்டிடங்கள் கட்டப்பட்டன.

2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கம்போடியாவில், ஆவி வழிபாடு, முன்னோர்கள் வழிபாடு, உள்ளூர் தெய்வங்களை வணங்குவது என்ற வழக்கங்கள் மட்டுமே இருந்தன. தனியாக மதம் என்ற ஒன்றே அங்கு இல்லை.

1500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் இருந்து சென்ற தமிழர் சமயம், புத்த மதம் ஆகியவை தான் கம்போடியாவில் முதன் முதலாக அறிமுகம் ஆன மதங்கள் ஆகும்.

தொடக்கத்தில் புத்த மதம் மட்டுமே இந்தியாவில் இருந்து கம்போடியாவுக்குச் சென்றது என்றாலும், அதன் பிறகு சென்ற இந்து மதத்தையே பெரும்பாலான கம்போடிய மன்னர்கள் கடைப்பிடித்தனர்.

வேத மந்திரங்களை ஓதுவதன் மூலம் விரும்பியவற்றை அடையலாம் என்ற அவர்களது நம்பிக்கையே இதற்குக் காரணம்.

ஆனாலும், அந்தக்கால கம்போடிய மன்னர்களின் பாராட்டப்பட வேண்டிய கொள்கை, அவர்களின் மத சார்பற்ற தன்மையே.

அவர்கள் தமிழர் சமயத்தை தீவிரமாகப் பின்பற்றினாலும், தமிழ் மொழி மீது ஆர்வம் காட்டினாலும், மதத்தையும், மொழியையும், நாட்டு மக்கள் மீது திணிக்கவில்லை,

தாங்கள் கட்டிய கோவில்களில் தமிழ்க் கடவுள்களின் சிலையை வைத்துக்கொண்டும், தங்களுக்கென்று அந்தணர்களை தலைமை மத குருக்களாக வைத்துக்கொண்டும் அவர்கள் வழிபாடுகளை நடத்தினார்கள்.

மன்னருக்காக யாகங்கள் நடத்துவது, மன்னரின் வாள் மற்றும் ஆயுதங்களை பாதுகாப்பது, விழாக்காலங்களில் நடைபெறும் வழிபாடுகளுக்குத் தலைமை தாங்குவது ஆகியவை மன்னரின் தலைமை மத குருக்களாகச் செயல்பட்ட அந்தணர்களின் கடமை என்று வரையறுக்கப்பட்டது.

கோவில்களுக்கு வந்து செல்ல மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது என்றாலும், அத்தகைய வழிபாடுகளில் ஈடுபட மக்கள் கட்டாயப்படுத்தப்ப டவில்லை.

இதன் காரணமாகவே, விஷ்ணுவின் விக்கிரகம், லிங்க உருவங்கள் ஆகியவை இடம்பெற்ற கம்போடியக் கோவில்கள், தமிழகத்தில் இருப்பது போன்று மக்கள் சென்று வழிபடும் இடங்களாக அல்லாமல், மன்னர் மட்டும் சென்று வழிபடும் வகையில் மாற்றிக் கட்டப்பட்டன.

மற்ற கடவுள்களின் உருவங்களையும், இறைவன் நடத்திய திருவிளையாடல் போன்ற நிகழ்வுகளின் சிற்பங்களையும், கோவில் கோபுரத்தின் சுவர்களில் வைத்துக்கட்டுவது தமிழர்களின் வழக்கம்.

ஆனால், கம்போடிய மன்னர்கள் கட்டிய கோவில்களின் சுவர்களில் அது போன்ற சிற்பங்கள் வைக்கப்படாமல், அவை கோவிலுக்குள் இருக்கும் வாசல் நிலைப்படிகளுக்கு மேல் அலங்கார ரூபத்தில் அமைக்கப்பட்டன.

கடலால் சூழப்பட்ட பகுதிக்கு நடுவே மேரு மலையில் இறைவன் குடி கொண்டு இருப்பதை சுட்டிக்காட்டும் வகையில், அனைத்து கோவில்களைச் சுற்றிலும் பெரிய அளவில் அகழிகள் அமைக்கப் பட்டதும் தமிழகக் கலாச்சாரத்தில் இருந்து மாறுபட்ட அம்சம் ஆகும்.

இந்து மதம் கம்போடியாவுக்குச் சென்ற காலத்தில் வர்ணாசிரமம் என்ற ஜாதி பாகுபாடு தமிழ்நாடு உள்பட இந்தியா முழுவதும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

பிராமணர்கள், சத்தியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற அந்த ஜாதி பாகுபட்டை கம்போடிய மன்னர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வில்லை. கம்போடியாவில் ஜாதி பாகுபாடு முறை ஒருபோதும் கொண்டுவரப்படவில்லை என்பது முக்கிய அம்சமாகப் போற்றப்படுகிறது.

கம்போடிய மன்னர்கள், அந்தணப் பெண்களை விரும்பி திருமணம் செய்து கொண்டனர். அதே போல தங்கள் மகள்களை அந்தணர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர் என்பதையும் வரலாறு பதிவு செய்து இருக்கிறது.

12ம் நூற்றாண்டு இறுதி வரை கம்போடியாவில் தமிழர் சமயம் உச்சத்தில் இருந்தது. அதன் பிறகு வந்த மன்னர்கள் சிலர் புத்த மதத்திற்கு மாறியதால் அங்கே புத்த மதத்தின் தாக்கம் அதிகமானது.

தமிழர் சமயத்தைப் போற்றிய மன்னர்களின் ஆட்சியில், இந்துக் கடவுள்களுக்கும், புத்த மதத்திற்கு மாறிய மன்னர்களின் ஆட்டிசயின்போது புத்தருக்கும் தனித்தனியாகக் கோவில்கள் கட்டப்பட்டன.

இவ்வாறான ஆட்சியாளர்களின் மத மாற்றம், நாட்டில் குழப்பத்திற்கும் காரணம் ஆகிவிட்டது. மத மாற்றப் பிரச்சினை, அங்கே இரந்த கோவில்களில் வன்முறை வடிவில் எதிரொலித்தது.

இரண்டாம் சூரியவர்மன் என்ற வைணவ மன்னர், விஷ்ணுவுக்காகக் கட்டிய அங்கோர்வாட் கோவிலின்

நடுவே, கருவறையில் 15 அடி உயரத்தில் 8 கரங்களுடன் கூடிய விஷ்ணு சிலை அமைக்கப்பட்டு இருந்தது.

பிறகு ஆட்சிக்கு வந்த மன்னர், புத்த மதத்திற்கு மாயி போது, இந்தச் சிலை அங்க இருந்து அகற்றப்பட்டதோடு, அந்தச் சிலையில் விஷ்ணுவின் தலையை மட்டும் எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக புத்தரின் தலை வைக்கப்பட்டது. (இப்போது அந்தச் சிலையில் மீண்டும் விஷ்ணுவின் தலை வைக்கப்பட்டு விட்டது. ஆனால், அந்தச் சிலை அங்கோர் வாட் காவிலின் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்படாமல், கோவிலின் வெளிப்பகுதியில் வைத்து வழிபாடு நடத்தப்படுகிறது)

இதேபோல, பிறகு ஆட்சிக்கு வந்த வேறு ஒரு மன்னர், இந்து மதத்திற்கு மாறியபோது, புத்த கோவில்களில் இருந்த புத்தரின் சிலைகளும் சேதப்படுத்தப்பட்டன. (இப்போதும் பல கோவில் களில் புத்தர் சிலைகள் சேதப்படுத்தப்பட்டு இருப்பதைக் காண முடியும்)

புத்த மதத்தில் மஹாயானம், ஹீனயானம் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. தொடக்க காலத்தில் மஹாயான புத்த மதம் கம்போடியாவில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் அது சில ஆண்டுகளே நீடித்தது.

பின்னர் கடைபிடிக்கப்பட்ட ஹீனயான புத்த மதமே இப்போதும் கம்போடியாவில் நீடித்து இருக்கிறது. ஆனால், கம்போடிய மக்கள் புத்த மதத்தைப் போலவே இந்து மதத்தையும் விரும்புகிறார்கள் என்பதையும், இப்போதுகூட அவர்கள் வழிபாட்டில் இரண்டு மதங்களும் இடம் பெற்று இருப்பதையும் காண முடிகிறது.

அங்கோர்வாட் கோவில், விஷ்ணுவுக்காகக் கட்டப்பட்ட கோவில் என்பது ஐயம் இன்றி நிரூபிக்கப்பட்ட பின்னரும், அங்கே புத்த துறவிகளும் வந்து வழிபாடு நடத்தும் வினோதத்தையும் நாள்தோறும் காணலாம். கம்போடியாவில் தமிழகத்தின் தாக்கத்திற்கு அழியாத சாட்சியங்களாக இருப்பவற்றில் முக்கிய இடம் பிடித்தவை அங்குள்ள கோவில் கட்டிடங்களும் அவற்றில் உள்ள அழகிய சிற்பங்களும் ஆகும்.

தமிழகத்தில் இருந்து சென்ற அந்தணர்களின் வழிகாட்டுதலின் பேரிலும், தமிழக சிற்பக் கலைஞர்களின் திறமையாலும் கம்போடியாவில் அழகிய கோவில்கள் ஏராளமாகக் கட்டப்பட்டன. ஆனால், இந்தக் கோவில்களின் கட்டமைப்பிலும், அங்குள்ள சிற்பங்களிலும் இந்திய சாயலைக் காண முடியாது. அவற்றில் கம்போடியர்களின் கலைத்திறன் மட்டுமே மிளிர்கின்றன.

அங்குள்ள லிங்க வடிவங்கள், மற்றும் இந்துக் கடவுள்களின் சிலைகள் மட்டுமே இந்திய சாயலைக் கொண்டு இருக்கும். மற்ற உருவாங்கள் அனைத்தும் கம்போடிய கலாச்சாரப்படி அமைக்கப்பட்டு இருக்கின்றன.

கோவில்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஆடல் பெண்களின் சிற்பங்கள் அனைத்தும் கம்போடிய பெண்களின் முக அமைப்பைக் கொண்டதாகவே உள்ளன. தமிழர்களிடம் இருந்து சிற்ப சாஸ்திரத்தைக் கற்றுக் கொண்ட கம்போடிய சிற்பிகள், தமிழக கலாச்சாரத்தை அப்படியே பின்பற்றாமல், அங்கே சிற்பங்கள் அமைப்பதில், தங்களது தனித் திறமையை முழு அளவில் காட்டி, உள்ளூர் வடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பதை அனைத்துக் கோவில்களிலும் காண முடிகிறது.

மொழியைப் பொறுத்த அளவில், இந்தியாவில் இருந்து சென்ற சமஸ்கிருதம் தமிழும் ஆட்சியாளர்கள் அளவில் மட்டுமே கம்போடியாவில் பயன்படுத்தப்பட்டன. மன்னர்கள் எழுதிய சாசனங்களும், கல்வெட்டுகளும் சமற்கிருதத்திலும், அப்போது வழக்கில் இருந்த தமிழ் பிராமி எழுத்திலும் எழுதப்பட்டன. பிற்காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் மட்டுமே கெமெர் மொழியில் உள்ளன.


ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கம்போடிய மக்களுக்கு தமிழில் எழுதவும் படிக்கவும் தெரியும் என்பதை அந்தக்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட சாசனங்களும் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. மன்னர்களின் ஆட்சியின்போது கம்போடிய மக்களின் பொது வாழ்வில் தமிழ் ஓரளவு பேசப்பட்டாலும், பெரும்பாலான மக்களின் பேச்சு மொழியாக அந்த நாட்டின் கெமெர் மொழியே இருந்தது.

ஆனாலும், தமிழ் மொழி மீது கம்போடிய மக்களுக்கு அபரிமிதமான விருப்பம் இருந்தது என்பதை, அவர்கள் தங்களது குழந்தைகளுக்கு சூட்டிய பெயர்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

கம்போடியா நாட்டு மக்கள் பலரது பெயர்கள் சுத்தமான தமிழ்ப் பெயர்களாகவும், சில பெயர்கள் வடநாட்டுப் பெயர்களின் சாயலாகவும் இருக்கின்றன. பிறந்த குழந்தைகளுக்கு எந்தப் பெயரை வைக்கலாம் என்பதைத் தேடுவதற்குத் தனி இணையதளம் இருக்கிறது. இதற்கான கம்போடியா இணைய தளத்தைத் துழாவினால், அவற்றில் தமிழ்ப் பெயர்கள் பல இருப்பதைக் காண முடியும்.

கம்போடியர்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கை, அவர்கள் நடத்தும் திருமண விழாக்கள், விருந்தோம்பல், பண்டிகைகள், இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகள் ஆகியவை பெரும்பாலும் தமிழக மக்களின் நடைமுறை போலவே இருக்கிறது.

**நன்றி: தினத்தந்தி.**



# இந்து மதம் பெயரின் வரலாறு

1. இந்தியாவின் வடமேற்கிலுள்ள கைபர், போலன் கணவாய் வழியாக முதலில் இந்தியாவினுள் வந்தவர்கள் பாரசீகர்கள்.

2. பாரசீகர்கள், இந்தியாவில் பார்த்த நதி சிந்து.

3. பாரசீக மொழியின் உச்சரிப்பின்படி சிந்து என்பதை இந்து என்று உச்சரித்தார்கள்.

4. இதனால், சிந்து நதி பாயும் பகுதி இந்தியா என்னும் பெயரால் அழைக்கப்பட்டது.

5. சிந்து நதியின் கரையில் வாழ்ந்த மக்கள் இந்தியர் எனும் பெயரால் அழைக்கப்பட்டனர்.

6. கி.பி. 1794 இல் கல்கத்தாவில் ஆங்கில அரசின் உச்ச நிதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த சர்.வில்லியம் ஜோன்ஸ், சமற்கிருதத்தில் இருந்த ஆரியர்களின் சட்ட நூலாகிய மனுநூலை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார்.

7. அவர் மனுநூல் இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்குமான அரசியல் சட்ட நூல் என்னும் நம்பிக்கையில், இந்திய மக்களுக்கான சட்டநூல் என்னும் பொருளில் மனுநூல் கொள்கைகளுக்கு ஆங்கிலத்தில் 'Hinduism' என்னும் புதிய பெயரை உருவாக்கிக் கொடுத்தார்

8. 'Hinduism' என்னும் ஆங்கிலப் பெயர் இந்துத்துவா என அழைக்கப்படுகிறது. மனுநூல் கொள்கையாகிய இந்துத்தவா ('Hinduism') வின் பிடியிலுள்ள மதம் இந்து மதம் என்னும் புதிய பெயரைப் பெற்றது. கி.பி. 1794க்கு முன்னர் இந்து மதம் என்னும் பெயர் உலகில் எங்கும் இல்லை என்பது வரலாறு. ஆதி சங்கரர் காலத்தில், அவரால் வெளியிடப்பட்ட அத்வைதக் கொள்கையின் வழி மனுநூல் கொள்கைக்கு அடிமைப்படுத்தப்பட்ட தமிழர் சமயங்களான சைவமும், வைணவமும் 1794க்குப் பினனர் இந்து மதம் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. இதனால், இன்று தமிழர் சமயம் என்று கூறினாலும் இந்து மதம் என்று கூறினாலும் அது சைவ, வைணவ சமயங்களையே குறிக்கிறது என்பதில் ஐயம் இல்லை.

9. ஆரியர்களின் சட்ட நூல், வட இந்தியாவை கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த, ஆரியர்களின் ஆட்சியில் ஆரியர் அல்லாத இந்திய மக்களை அடக்கி ஆளுவதற்காக, ஆரியர்களால் உருவாக்கப்பட்ட மனித நேயத்திற்கு எதிரான ஒரு அதர்மச் சட்ட நூல் ஆகும்.

10. அதர்மச் சட்ட நூலாகிய மனுநூல், ஆரியர்களால் அவர்களுக்குரிய தரும சாஸ்திரம் என்று அழைக்கப்பட்டு, இந்திய மக்கள் மீது சதி முறையில் திணிக்கப்பட்டது. ஆரியர்களின் சதிக்கு, ஆரியர்களின் தலைவர்களாகிய ஆரியப் பிராமணர்கள் அரசியல் அதிகாரத்திற்காக தங்கள் பெண்களைக் கருவிகளாகப்

பயன்படுத்தவது பெண்களுக்குச் செய்யப்படும் கொடுமையாகும். ஆரியப் பிராமணர்கள் அவர்கள் வீட்டுப் பெண்களை, பிராமணப் பெண்கள் என்று கூறாமல் சூத்திரப் பெண்கள் என்று கூறுவதற்கு வரலாற்றுக் காரணம் இருக்கிறது.

11. ஆரியப் பிராமணர் குலத்தில், தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய சேர நாட்டிலுள்ள காலடியில் பிறந்த ஆதிசங்கரர், கடவுளுக்கு எதிரான நானே கடவுள் (அகம் பிரம்மாஸ்மி) என்னும் நாத்திகக் கொள்கையின் அடிப்படையில் தமிழர்களின் சமயங்களான சைவச் சின்னமாகிய திருநீற்றை நெற்றியில் அணிந்து கொண்டு, வைணவத் திருப் பெயரான நாராயணா என்று வாயினால் கூறிக் கொண்டு, தமிழ் இனத்தையும், தமிழர் சமயங்களான சைவ, வைணவ சமயங்களையும், சதிமுறையில் ஆரியப் பிராமணர்களின் மனுநூல் கொள்கைக்கு அடிமைப்படுத்தும் அத்வைதக் கொள்கையை வெளிப்படுத்தினார்.

12. அத்வைதக் கொள்கையையும், ஆரியப் பிராமணப் பெண்களையும் பயன்படுத்தி, சைவ, வைணவ சமயங்களின் ஆன்மீகத் தலைவர்ளின் பரம்பரையில் வந்த நந்தனாரையும், திருப்பாணாழ்வாரையும் கொலை செய்து விட்டு, தமிழர் சமயக் கோவில்களின் தலைமைப் பொறுப்புகளை அபகரித்து இன்று வரை நீடிக்கின்றனர்.

13. தமிழர் சமயத் தலைவர்களான நந்தனார், திருப்பாணாழ்வார் வரலாற்றை ஆய்வு செய்யும் தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளை, தமிழ் இனத்தையும் தமிழர் சமையத்தையும், தமிழர் சமயக் கோவில்களையும் ஆரியப் பிராமணர்களின் அடிமைத் தளையின் கட்டுகளிலிருந்து விடுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நந்தனார், திருப்பாணாழ்வார் பரம்பரையினரின் மறைக்கப்பட்டு, மறைந்து கிடக்கும் உண்மை வரலாற்றை, உலகுக்கு அறிவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சி மனிதரின் முயற்சியாக இல்லாமல் கடவுளின் திட்டமாக இருக்கிறது. கடவுளால் தெளிவாகக் கூறப்பட்டு வழி நடத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த முயற்சியில் முழு மனதுடன் ஈடுபடும் அனைவரும் அறிவர்.

14. இந்த வரலாறு, இந்திய வரலாற்றில் மிகவும் சிக்கலாக, ஆரியப் பிராமணர்களின் சதியால் பின்னிப் பிணைந்து கிடப்பதால், தற்போதைய நிலையில் இந்தியாவின் உச்சநீதி மன்றம் “பிவீஸீபீ௵வீஜீ” ஒரு மதமா? அல்லது வாழ்கை முறையா? என்பதைப் பிரித்து அறிய 7 நீதிபதிகளை நியமித்து, சில ஆண்டுகள் ஆராய்ந்த போதிலும், தெளிவான வரையறையைக் காண இயலாமற் போனதை நாம் கண்டோம்.

15. இதனால் அயோத்தியில் மசூதியை இடித்து விட்டு, அந்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டுவோம் என்னும் இந்துத்துவாவாதிகள் இந்திய மக்களிடையே குழப்பத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்தும் முயற்சிகளைத் தடுக்கும் வழி வகைகளைக் காண இயலாமல் உச்ச நீதிமன்றம் தத்தளிக்கிறது என்பதை உலகம் அறிந்து திகைக்கிறது.

உச்ச நீதிமன்றம் விடை அறிய இயலாமல் தத்தளிப்பது ஏன்?

1. இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த இந்திய மொழிகள் இரண்டு மட்டுமே ஆகும்.

1. தென்மொழியாகிய தமிழ்

2. வடமொழியாகிய சமற்கிருதம்

2. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தென்மொழியாகிய தமிழ் மொழி ஆராய்ச்சியாளர்கள் அல்லர். இதனால் தென்மொழியாகிய தமிழிலுள்ள தமிழர் சமய வரலாறு அவர்களுக்குத் தெரிய வழி இல்லை.

3. இதனால் கி.பி.1794 இல் சர். வில்லியம் ஜோன்ஸ் உருவாக்கிய ‘Hinduism’ கொள்கையின் பிடியிலுள்ள ‘Hindu Religion’ என்னும் தமிழர் சமயமும் அவர்களுக்குத் தெரிய வழியில்லை.

4. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் ஆதிசங்கரரால், தமிழர் சமயமான சைவமும், வைணவமும் மனுநூல் கொள்கைக்கு அடிமைப்படுத்தப்பட்டமையும் அவர்களுக்குத் தெரிய வழி இல்லை.

5. இதனால் மனுநூல் கொள்கையில் இல்லாத கடவுள் கொள்கையைத் தேடித் தத்தளித்து நிற்கிறது உச்ச நீதிமன்றம்.

இன்றைய நிலையில் இந்து மத வரலாற்றுக்குரிய பெயர்கள்:

1. இந்து சிந்து நதியின் பாரசீக உச்சரிப்பு

2. இந்துக்கள் சிந்து நதிக்கரையில் வாழ்ந்த மக்கள்

3. இந்தியா சிந்து நதி பாயும் நாடு

4. இந்திய மதங்கள் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், சீக்கியம் ஆகிய ஐந்து மதங்கள்.

5. இந்துத்துவா மனுநூல் கொள்கை

6. இந்து மதம்மனுநூல் கொள்கையால் அடிமைப் படுத்தப்பட்டுள்ள மதம்


பேராசிரியர் முனைவர் **மு. தெய்வநாயகம்**
எம்.ஏ., பி.எச்டி.,
நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர்
உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளை.
044 26743842, 9840003842.



# வானவில்

மழைநாளின் வானவில்லை
கோடையில் தேடியதில்
தேடாதே தெரியாதென்றார்கள்
வானவில் தெரிந்த நாட்களில்
ஏழு நிறமும் தெரியுமென்று
விரல் விட்டு கணக்கிட்ட
ஒன்று குறைச்சலென்றேன்
தாமதமாய்ப் பார்த்தால்
அப்படித்தான் என்றார்கள்
நானும் அதைநம்பினேன்

வட்டத்தை வரையநினைத்து
அரைவட்டத்தில் வருண பகவான்
உறங்கப் போய்விட்டா னென
நாத்திகரொருவர் சொன்னார்
இல்லையில்லை அது பொய்
அதுவேராமரின் வில்லென்றும்
சீதா தேவியின் புருவமென்றும்
ஆத்திகரொருவர் சொன்னார்
எதை நான் நம்புவதோ

இன்றையமழைநாளிலோ
வானவில் அனைத்தும்
கோணவில்லாய்மாறி
மாயமாய்மறைந்து போச்சு

கவிஞர் **இளந்தேவன்,** திருச்சி.

# விவசாயத்தைத் தாங்குவோம்!

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம்!
சொன்னார் மகாத்மா காந்தி

சோறு போட்ட பூமியை
கூறு போட்டு விற்றதால்
முதுகெலும்பு முறிந்து போனது!

நகரத்தில் வாழும்
படித்தவர்கள் எல்லாம்
தங்கள் தொப்புள் கொடியாம்
கிராமத்தை மறந்து விட்டனர்
விவசாயத்தை துறந்து விட்டனர்

நம் பாட்டன் பூட்டன் சிந்திய
வியர்வை தண்ணீரும் செந்நீரும்
நிலத்தில் சகதியாய் மாறி
பயிர்கள் விளைந்ததால் – நம்
உயிர்கள் வளர்ந்தது

இந்த விவசாயத் தொழில்
எங்களோடு போகட்டும்!
நாங்க பட்ட துன்பம்
நீ படக்கூடாது!
நீ நல்லாப் படிச்சு
மருத்துவராக பொறியாளராக வரணும்
என்று சொன்ன பெற்றோரால்
விவசாயம் வீழ்ந்து போனது!

விவசாயம் என்பது
தொழில் அல்ல! – அது
நமது அடையாளம்!

ஆணிவேரை மறந்துவிட்ட
கிளைகள் நாம் – இனி
விழுதுகளாய் இருந்து
விவசாயத்தைத் தாங்குவோம்!

**அடையாறு இரவி,**
சென்னை.7200552393.



# இடஒதுக்கீடு: நேற்று, இன்று, நாளை.
# மோகன் பகத்துக்கு பதில் சொல்லும் விவாத அரங்கம்.



There should be a conversation in an atmosphere of harmony between those in favour of reservations and those against it, RSS chief Mohan Bhagwat said on Sunday, provoking criticism and allegations that he is telegraphing the ruling BJP's intent of ending quota for the poor and backward castes.

ஒரே இனமாக இருந்த இந்திய தேச மக்களுக்குள், பார்ப்பனிய தத்துவத்தினால் சாதிகள் உருவாக்கப் பட்டு, அதனால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு, இம்மண்ணின் மைந்தர்களுக்குள் தவறான அபிப் பிராயம் புரையோடிப் போய் இருக்கின்றது. சகோதரத்துவ சமூகத்தை இம்மண்ணில் விதைக்க முடியாமல் இருப்பததற்கு மூல காரணம் பார்ப்பனர் களால் கெண்டு வரப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத சதுர்வர்ண இட ஒதுக்கீடு.

இந்த சதுர்வர்ண இடஒதுக்கீடு, மதத்தோடு பின்னிப் பிணைந்து கிடப்பதால், அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டு இருக்கின்ற சமூக நீதிக்கான இட ஒதுக்கீட்டை முழுமையாக நடை முறைப்படுத்த முடியாமல் ஆட்சியாளர்கள் இருக்கின் றனர்.

பார்ப்பனியத்தின் ஆன்மாவான "சாதி தீண்டா மையால்" இந்தியச் சமூகம் சமத்துவத்தையும், சகோதரத் துவத்தையும் சுதந்திரத்தையும், நீதியையும், நாட்டின் இறையாண்மையையும் இழந்து தவிக்கின்றது. சாதியிசம் இருக்கின்றவரை எந்த மதத்தினாலும் இந்திய சமூகத்திற்குள் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது. எனவே, இந்த பார்ப்பனியத்தின் 'ஆன்மா' ஒழிக்கப்படும் வரை பட்டியலின பழங்குடி இன மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்த மதத்திற்கு மாறினாலும் அவர்களுக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீடு மற்றும் சலுகைகள் தொடர வேண்டும் என்கின்ற கருத்தை மையமாக வைத்து விவாதம் நடத்தத் திட்டமிட்டு உள்ளோம். சாதிகளற்ற சமத்தவ சமூகம் படைக்க, இம்மண்ணின் மைந்தர்கள் ஆட்சியார்களாக வருவது மட்டுமே ஒரே தீர்வு.

ஆதலால், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற அரசு உயர் அதிகாரிகள், நீதிபதிகள், மூத்த பத்திரிகை ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள் பங்கு பெரும் விவாத மேடையில், 'சகோதரத்துவம்' என்கின்ற கருத்தை மையமாக வைத்து இந்திய ஜனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கத்தில் இந்நிகழ்ச்சியை நாங்கள் ஏற்பாடு செய்ய இருக்கின்றோம்.

சமூகப் பற்றாளர்களின் மேலான ஆதரவும், ஆலோசனையும் அவசியம் என்பதை முக்கியமாகக் கருத்தில் கொண்டு இந்நிகழ்வை உங்களுடைய பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

**விவாத மேடை ஒருங்கிணைப்புக்குழு,**
**சென்னை.**




# சிறந்த அரசுப் பள்ளிக்கான சுற்றுச்சூழல் விருது

மதுரை மாவட்டம் கள்ளிக்குடியை அடுத்த பேய்க்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சிறந்த அரசுப் பள்ளிக்கான சுற்றுச்சூழல் விருது வழங்கப்பட்டது. கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேய்க்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச் சுற்றிலும் மரக்கன்றுகள் நட்டு, பள்ளி சார்பில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனை பாராட்டும் விதமாக திருமங்கலம் அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி மையம் சார்பில் பள்ளிக்கு சுற்றுச் சூழல் விருது வழங்கப் பட்டது.

நிகழ்ச்சிக்கு திருமங்கலம் வழக்குரைஞர் சங்கத் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். வட்டாரக் கல்வி அலுவலர்கள் டே. மோசஸ் பெஞ்சமின், சின்ன வெள்ளைச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் திருமங்கலம் அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி மையம் (ஸ்டார் சென்டர்) நிறுவனர் எம். வில்லியம் எபனேசர் பள்ளிக்கு சுற்றுச்சூழல் விருது வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவி யருக்கு மரக்கன்றுகள் வழங்கி அதனை முறையாக பராமரிப்பவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

திருமங்கலம் மக்கள் சேவை சங்கச் செயலர் திருமலைசாமி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பழனி ராஜ், ரோஸ் அரிமா சங்கத் தலைவர் வேம்பு வேந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் க. தாமோதரன் வரவேற்றார். பள்ளி ஆசிரியை முப்புடாதி நன்றி கூறினார்.

**ஜான் ஜெயராமன்.**

காசுமீரத்தில் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவும் அடக்குமுறையும் அமலில் இருப்பது சனநாயகத்துக்கு எதிரானது என்று சொல்லி, கேரளாவைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி பதவி விலகியிருக்கிறார். இவரது இந்தப் பதவி விலகல் நாடு முழுவதும் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.


கேரளாவைச் சேர்ந்த 2012 ஆம் ஆண்டு பேட்ச் ஐஏஎஸ் அதிகாரி கண்ணன் கோபிநாத். இவர் தாத்ரா நகர், ஹவேலி யூனியன் பிரதேசத்தில் மின்சாரம், மரபுசாரா எரிசக்தித் துறைச் செயலாளராக இருந்தார்.

இந்த நிலையில் ஆகஸ்ட் 21 ஆம் நாள் தனது பதவியை ராசினாமா செய்துவிட்டார். அதுகுறித்த காரணங்களை ஊடகங்களிடம் அவர் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

“என் கருத்துரிமையை மீண்டும் நான் பெற விரும்புகிறேன். ஒரு நாளாவது நான் நானாக இருக்க ஆசைப்படுகிறேன். உலகின் மிகப்பெரிய சனநாயக நாடான இந்தியா, தன்னில் இருக்கும் ஒரு மாநிலம் முழுக்க தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அங்கே மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டின் ஆட்சிப் பணி அதிகாரியாக இருக்கும் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று யாராவது என்னிடம் கேட்டால், நான் அவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்பதால்தான் எனது ஐஏஎஸ் பதவியை ராசினாமா செய்கிறேன். நான் ஒரு செய்தித்தாள் நடத்துபவராக இருந்தால் ஒவ்வொரு நாளும் முதல் பக்கத்தில் எண்களை மட்டுமே பிரசுரிப்பேன். இன்று ‘19’ என்று குறிப்பிட்டிருப்பேன். ஏனெனில் காசுமீர் மக்கள் தங்கள் உரிமைகளை இழந்து இன்று 19வது நாள்“ என்று கூறியிருக்கிறார் கண்ணன் கோபிநாத்.

மேலும் அவர், “நான் நிறைய நம்பிக்கையோடு இந்திய ஆட்சிப்பணியில் சேர்ந்தேன். குரலற்றவர்களின் குரலாக இருக்கலாம் என்ற நம்பிக்கையோடுதான் ஐஏஎஸ் பணிக்கு வந்தேன். ஆனால் இங்கே என் குரலையே நான் இழந்து விட்டேன். எனது ராசினாமா என்பது ஒரு பொருட்டான விளைவை, தாக்கத்தை ஏற்படுத்துமா என்று நான் நினைக்கவில்லை. நாடு ஒரு கொந்தளிப்பான நேரத்தைக் கடந்து செல்லும்போது, ‘நீ என்ன செய்தாய்’ என்று என்னிடம் யாராவது கேட்டால், “நான் லீவு எடுத்துக் கொண்டு அமெரிக்கா போய் மேல் படிப்பு படிக்கப் போகிறேன்“

# காசுமீரத்திற்காக பதவி விலகிய ஐ.ஏ.எஸ். அதிகாரி!





என்று சொல்ல விரும்பவில்லை. அதைவிட வேலையை விட்டு விலகுவது நல்லது" என்று கூறியிருக்கும் கண்ணன் கோபிநாத். நம் நாட்டின் சிஸ்டம் பற்றியும் பேசுகிறார்.

"இந்த நாட்டின் சிஸ்டத்தை மாற்ற வேண்டும் என்று பேசுகிறோம். அப்படி மாற்ற வேண்டுமெனில் நாம் இந்த சிஸ்டத்துக்குள் இருக்க வேண்டும். நான் இந்த சிஸ்டத்தை மாற்றுவதற்கு முயற்சித்தேன். ஆனால் இதை சரி செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

எனக்கென்று எந்தச் சேமிப்பும் இல்லை. இப்போது வரை அரசு வீட்டில்தான் இருக்கிறேன். வேலையை விட்டுப் போய்விட்டால் எங்கே போவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. என் மனைவி வேலையில் இருக்கிறார். அவர் எனக்குத் துணையாக இருக்கிறார்" என்று கூறியிருக்கிறார் பதவியை ராசினாமா செய்த கண்ணன் கோபிநாத்.

அண்மையில் கேரள வெள்ளத்தின்போது தாத்ரா நகர் சார்பில் நிவாரண உதவிகளை கேரள முதல்வரிடம் அளிக்க வந்த கண்ணன் கோபிநாத், பணிக்கு விடுப்பு போட்டுவிட்டு தான் ஐஏஎஸ் என்று காட்டிக் கொள்ளாமலேயே நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்.

கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த கண்ணன் கோபிநாத், அருகே உள்ள புதுப்பள்ளியில் தனது பள்ளிப் படிப்பை முடித்தார். பிர்லா தொழில்நுட்ப மையத்தில் எலக்ரிகல் இன்ஜினியரிங் பட்டப் படிப்பு முடித்தார். தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வநதார். 2012ஆம் ஆண்டு ஐஏஎஸ் தேர்வில் நாட்டிலேயே 59 வது இடத்தில் வெற்றி பெற்றார்.

காசுமீர் மக்களுக்காக கண்ணன் பதவி விலகியிருப்பது இந்தியா முழுவதும் விவாதப் பொருளாகி வருகிறது.

முகநூலில் இருந்து...
**உமாமகேசுவரி.**


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-


# கலைச் சொற்கள் உருவாக்கும் மாணவர்களுக்கு விருது

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கமும், சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியும் இணைந்து அகராதியியல் விழிப்புணர்வு கருத்தரங் கத்தை கல்லூரி கலையரங்கத்தில் நடத்தினர்.

இந்தக் கருத்தரங்கத்திற்கு தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க. பாண்டியராஜன் தலைமை தாங்கினார். இதில் கூடுதல் தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்கத்தின் இயக்குனர் தங்க. காமராசு, தொகுப்பாளர் செ. சாந்தி, கணினி தொழில்நுட்ப வல்லுனர் சிவலிங்கம், எத்திராஜ் மகளிர் கல்லூரியின் நிருவாக குழுத் தலைவர் சந்திராதேவி தணிகாசலம், தமிழ்த்துறைத் தலைவர் அரங்க மல்லிகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் அமைச்சர் பேசியதாவது :-

அகரமுதலி இயக்கத்தில் மாதம் இரண்டு நாள் நடைபெறும் தமிழ் கலைக்கழகம் வாயிலாக இதுவரை 12000 புதிய தமிழ் கலைச்சொற்கள் உருவாக்கப் பட்டுள்ளன. அவையெல்லாம் அரசின் ஆணைக்காக காத்திருக்கின்றன. சொல்லாக்க அறிஞர்களையும் விஞ்சும் அளவிற்கு சொற்களைப் படைக்கும் பிரம்மாக்களாக மாணவர்கள் உயர்ந்திருக்கிறார்கள்.

அகரமுதலி இயக்ககம், சொற்குவைத் திட்டத்தை மாணவர்களிடமும், பொது மக்களிடமும் பரவலா கவும், சிறப்பாகவும் கொண்டு சேர்த்ததுடன், வெற்றியும் பெற்றிருக்கிறது. சிறந்த கலைச் சொற்களை உருவாக்கும் மாணவர்களை தமிழக அரசு பாராட்டு கிறது. அத்தகைய மாணவர்களுக்குத் தமிழக அரசு விருதும், வேலைவாய்ப்பும் வழங்கும்.

சொற்குவை வலைத்தளத்தில் உங்கள் பெயர்களை உடனே பதிவு செய்யுங்கள் எப்போதும் அகரமுதலி இயக்ககத்தோடு தொடர்பில் இருங்கள். தமிழ் வளர்ந் தால் நீங்களும் உயருவீர்கள் என்றார்.

**ஜோ. லோகநாயகி.**



இந்தியாவிலேயே முற்றிலும் இயற்கை வேளாண் மைக்கு மாறிய பெருமையைப் பெற்றிருக் கிறது. நாட்டின் வடகிழக்குப் பகுதியில் ஒதுங்கி நிற்கும் மாநிலமான சிக்கிம்.

இதற்கு முக்கியக் காரணமாகத் திகழ்ந்தவர் அந்த மாநிலத்தின் முதல்வர் பவன்குமார் சாம்லிங். தொடர்ந்து ஐந்தாவது முறையாக முதல்வராக இருக்கும் இவர். அடிப்படையில் ஒரு விவசாயி. உணவையும் நிலத்தையும் நஞ்சாக்கும் நவீன விவசயாத் திலிருந்து மாற்றத்தை விரும்பிய பவன்குமார், 2003 ல் சிக்கிம் மாநிலத்தை 'ஆர்கானிக் ஸ்டேட்' எனச் சட்டப் பேரவையில் பிரகடனம் செய்தார். 'மாநிலத்தில் ரசாயன உரங்களுக்கும் பூச்சிக் கொல்லிகளுக்கும் முற்றாகத் தடை விதிக்கப்படுகிறது. தடையை மீறு வோருக்கு 'ஒரு லட்ச ரூபாய் தண்டம். மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை' எனவும் தடாலடியாக அறிவித் தார்.

வழக்கம் போல இந்த அறிவிப்பு அரசியலாக்கப் பட்டு எதிர்ப்புகள் தூண்டிவிடப்பட்டன. எதைப் பற்றியும் கவலைப்படாத பவன்குமார், தனது திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 'ஆர்கானிக் ஸ்டேட் போர்டு' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் மாநிலத்தில் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இயற்கை விவசாயத்திற்கு மாற்றுவது என தீர்மானித்துக் கொண்டு செயலில் இறங்கியது இந்த வாரியம்.

ஒரு பக்கம் இயற்கை வேளாண்மையை ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்து மக்களிடையே விழிப்பு ணர்வுப் பரப்புரை. மறுபுறம் இயற்கை வேளாண் மையை மேற்கொள்வதற்கும் இயற்கை உரங்களைத் தயாரிப்பதற்கும் தாராளமான மானியங் களை வழங்கியது மாநில அரசு. மாநிலம் முழுவதும் 24, 536 இயற்கை உரத் தயாரிப்பு மையங்களும் 1, 447 பசுந்தாள் உரத் தயாரிப்பு மையங்களும் அரசால் நிறுவப்பட்டன. இயற்கை உரத் தயாரிப்பு முறைகள் குறித்து உழவர் களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளால் 2009 ஆம் ஆண்டு இறுதிக்குள் எட்டாயிரம் ஏக்கர் நிலங்கள் இயற்கை வேளாண்மைக்கு மாற்றப்பட்டன. இதற்கிடையே, 2006, 2007ஆம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய மானியத்துடன் கூடிய இரசாயன உரக் கோட்டாவை வேண்டாம் என்று அறிவித்தார் பவன்குமார் அடுத்த கட்டமாக ஓராண்டுக்குள் 14 ஆயிரம் ஏக்கரை நஞ்சில் லாத பூமியாக மாற்றுவது எனத் திட்டமிடப்பட்டு, அதுவும் நிறைவேற்றப்பட்டது.

# இரசாயனத்தின் பிடியிலிருந்து மீண்ட சிக்கிம்



இதன் தொடர்ச்சியாக 'சிக்கிம் ஆர்கானிக் மிஷன்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் கீழ் கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு இயற்கை வேளாண் முறைகள் பிரபலப்படுத்தப்பட்டன. இந்தக் கிராமங் களுக்கு 'பயோ வில்லேஜ்' என்று அழைக்கப்பட்டன. நல்ல திட்டங்கள் பலன் தராமல் தோற்றுப் போனதற்குக் காரணமே தொடர் ஆராய்ச்சிகளும் வளர்ச்சியும் இல்லாமல் போனதுதான்.

இதைப் புரிந்து கொண்டு இயற்கை வேளாண் மையை மேம்படுத்தவும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வும் Center Of Excellence For Organic Farming என்ற ஆராய்ச்சி மையத்தை உருவாக்கினார். இத்தனை முன்னேற் பாடுகளுடன் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் சிக்கிம் மாநிலத்தை நஞ்சில்லா விவசாயப் பூமியாக மாற்றத் திட்டமிட்டு, அதை வெற்றிகரமாகச் சாதித் தும் காட்டியிருக்கிறது பவன்குமார் சாம்லிங் அரசு.

தொடக்கத்தில் சில சிரமங்கள் இருந்தாலும் இப்போது சிக்கிம் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் மகத்துவம் புரிகிறது. இவர்கள் விளைவிக்கும் இயற்கை வேளாண் பொருட்களை வாங்குவதற்கு டெல்லி, மத்திய ஆசிய நாடுகளில் தவம் கிடக்கிறார்கள்.

அண்மையில் சிக்கிம் சென்றிருந்த தேசிய பிற்பட் டோர் ஆணையத்தின் உறுப்பினர் கார்வேந்தன், அங்குள்ள இயற்கை வேளாண் நிலங்களையும், விவசா யிகளையும் சந்தித்துத் திரும்பியிருக்கிறார். தன்னுடைய அனுபவத்தை அவர் பகிர்ந்து கொண்டார்.

“நானும் ஒரு இயற்கை விவசாயிதான். அந்த ஆர்வத்தில் சிக்கிம் விவசாயிகளைச் சந்தித்துப் பேசினேன். சிக்கிமின் சில மலைப்பகுதிகளில் வாழும் ஒருசிலர் இயற்கை விவசாயத்தை எதிர்த்தாலும் அது எடுபடவில்லை. சிக்கிம் மாநிலத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இயற்கை வேளாண்மை மூலம் கடந்த ஆண்டில் மட்டுமே 80 ஆயிரம் மெட்ரிக் டன் விளைபொருட்களை 6 சிக்கிம் விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். இதில் இஞ்சி 45,890 மெட்ரிக் டன், மோட்டா ரக மிளகு 3,510 மெட்ரிக் டன், மஞ்சள் 2,790 மெட்ரிக் டன், சன்ன ரகக் கோதுமை 4,100 மெட்ரிக் டன்.

ஆண்டில் மூன்று மாதங்கள் அங்கே கடும் குளிர் நிலவும். அதை சமாளிக்க உடலுக்கு கேடு உண்டாக் காத, இரசாயனம் கலக்காத 'பயோ விஸ்கி' யையும் அங்கே தயாரிக்கிறார்கள்.

பயோ ஃபெர்ட்டிலைசர்ஸ் என்று சொல்லப்படும் இயற்கை உரம் தயாரிக்கும் பெரும் தொழிற்சாலையை அரசே நிறுவியிருக்கிறது. இதன் மூலம் ஒரே நேரத்தில் 3000 மெட்ரிக் டன் இயற்கை உரம் தயாரிக்க முடியும். தெற்கு சிக்கிமில் ராவங்லா என்ற இடத்தில் 440 ஏக்கரில் அரோமா ஆர்கானிக் தேயிலைத் தோட்டத் தையும் அரசு நடத்துகிறது. இங்கு விளையும் உலகத் தரம் வாய்ந்த தேயிலை பெருமளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மிகவும் பின் தங்கிய சிக்கிம் மக்கள் ரசாயனத்தின் ஆபத்தை உணர்ந்து இயற்கை விவசாயத்துக்கு மாறி விட்டார்கள். ஆனால், நாம் அது குறித்த விழிப் புணர்வு கூட இல்லாமல் இருப்பது வேதனைய ளிக்கிறது“ என்கிறார் கார்வேந்தன்.

பசுமைப் புரட்சிக்கு முன்பு நாட்டில் இவ்வளவு நோய்கள் இல்லை. அதிக மகசூல் என்று ஆசைகாட்டி நிலங்களையும் உண்ணும் உணவுகளையும் நஞ்சாக்கி விட்டார்கள். இரசாயன உரங்கள், உணவு எண்ணும் அத்தனை உயிர்களையும் சிறுகச் சிறுகக் கொல் கின்றன. இரசாயன உரங்களை ஒழிக்கப் போராடுவது தான் இப்போது முக்கியம்.

கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் 10 லட்சம் பேர் புற்றுநோய் பாதிப்பால் இறந்திருக்கிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் பெண்கள், குழந்தைகள். இதற்கு இரசாயன உரங்களும் முக்கியக் காரணம். சிக்கிமைத் தொடர்ந்து உத்தரகாண்ட், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்கள் இயற்கை விவ சாயத்தை நோக்கி நகர ஆரம்பித்திருக்கின்றன. ராஜஸ் தான், பஞ்சாப் மாநிலங்களில் இது குறித்த விவாதங்கள் தொடங்கிவிட்டன. ஆனால், வளமான விவசாயப் பூமி யைக் கொண்ட தமிழகத்தில் இயற்கை விவசாயம் குறித்த புரிதல் வேளாண் அதிகாரிகளுக்கே இல்லையே என்கிறார்கள் உழவர் உழைப்பாளர் கூட்டமைப்பினர்.

மெல்லக் கொல்லும் இரசாயனத்தின் பிடியிலிருந்து சிக்கிம் மீண்டுவிட்டது. தமிழகம்? ●

**ஆர்எஸ்எஸ் அமைப்பு ஒரு விசம்!**
**சர்தார் வல்லபபாய் பட்டேல்.**

மகாத்மா காந்தி படுகொலையைத் தொடர்ந்து ஆர்எஸ் எஸ் அமைப்பைத் தடை செய்த படேல், அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை யில் படேல் கூறியிருப் பதாவது.



“ஆர்எஸ்எஸ் அமைப்பின் நடவடிக் கைகள் தேசத்திற்கும் அரசுக்கும் மிகப்பெரிய ஆபத்தாக இருக்கின்றன. அவர் களின் பேச்சு களும் எழுத்துகளும் மதவாத விசத்தில் தோய்ந் திருக்கின்றன. அந்த விசம் கடைசியாக காந்தியின் தியாகத்தில் முடிந்திருக்கிறது. காந்தி இறப்பில் அவர்கள் இனிப்புகளைப் பகிர்ந்து கொண்டாடி இருக்கிறார்கள்.

ஆர்எஸ்எஸ் அமைப்போ வேறு இயக்கமோ தேசத்தை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டேன். இந்து ராஷ்டிரம் என்பது ஒரு பைத்தியக்காரச் சிந்தனை. மறந்து விடாதீர்கள். ஹிட்லரின் நாஜிகள், முசோலினியின் பாசிஸ்டுகள் போல இவர்களும், இன, மதவெறியை, சர்வாதிகாரத்தைப் போற்றும் இயக்கம்தான்.

# வீரத்தமிழர்முன்னணி மாயோன் பெருவிழா எடுப்பது இந்துத்துவா அரசியலா?

## இடும்பவனம் கார்த்தி



அடிப்படையில் இந்துத்துவம் என்பதே பலவற்றிலிருந்து திருடி, புனைந்து உருவாக்கப் பட்ட ஒரு பொய் புரட்டுக் கருத்தியல்தான். அதற்குச் சான்றாக பலவற்றை அடுக்கலாம். 'இந்திய வரலாறு என்பதே பௌத்தத்திற்கும், பார்ப்பனீயத்திற்குமான சண்டைதான்' என்கிறார் அண்ணல் அம்பேத்கர். அந்த அளவுக்குப் பார்ப்பனீயத்தை எதிர்த்துப் புரட்சி செய்திட்டவர் கௌதம புத்தர். அந்தப் புத்தரை 'விஷ்ணுவின் மூன்றாம் அவதாரம்' எனக் கூறி தன்வயப் படுத்தி, திருடி, அவர்களுக்குக் காவிச்சாயம் பூசிக்கொண்டிருக்கிறார்கள். ஏன்? இன்றைக்கு இந்துத்துவத்தின் நிறமாக இருக்கிற அந்தக் காவி நிறம் கூட சமண மதத்திடமிருந்துதான் திருடிச் சேர்க்கப்பட்டதாகும்.

மாட்டிறைச்சியை நெருப்பில் போட்டு யாகம் வளர்த்த ஆரியக்கூட்டம், புத்த மதத்தின் எழுச்சியைக் கண்டு அஞ்சியே, புலால் மறுப்பு எனும் கொள்கையை பௌத்த மதத்திடமிருந்து திருடியது என்பது வரலாறு. இன்றைக்கு இந்துத்துவத்தின் முகங்களுள் ஒன்றாகக் காட்டப்படுகிற மராத்தி மன்னர் சிவாஜியும் கூட தன் வயப்படுத்தப்பட்டு, திருடப்பட்டவர் தான். சிவாஜி இந்துவாக வாழ்ந்தார். ஆனால், ஒருபோதும் இந்துத்துவவாதியாக வாழவில்லை. சிவாஜியின் முதன்மைப் படைத்தளபதியாக விளங்கியவர்கள் தௌலத்கான், சிட்டி மிரி எனும் இசுலாமியர்கள்தான். அவரது முதன்மை வெளியுறவுச் செயலர் முல்லா ஹைதர் எனும் இசுலாமியர். ஆக்ரா சிறையிலிருந்து சிவாஜி தப்பிக்க உதவியவர் மதானி மஹதர் எனும் இசுலாமியர். இவ்வாறு படைகளில் இசுலாமியர்களை முதன்மைப்படுத்தியதோடு மட்டுமல்லாது அவர்களின் வழிபாட்டிற்காக ஒரு பள்ளிவாசலையும் கட்டிக் கொடுத்தார் சிவாஜி. இந்த வரலாற்று உண்மையை எடுத்துரைத்து தீஸ்தா செதல்வாத் என்பவர் எழுதிய கையேடு ஒன்றை மும்பை டான் பாஸ்கோ பள்ளியில் வெளியிட்டபோது, அதனை சிவசேனா வன்மையாக எதிர்த்தது. தங்களது அரசியலின் ஆணி வேரையே அசைத்துப் பார்த்ததாக எண்ணிப் பதறியது. அதேபோல, மறைந்த எழுத்தாளர் கோவிந்த் பன்சாரேவும் சிவாஜி யைப் பற்றிய வரலாற்று உண்மையைத் தனது நூலொன்றில் எழுதியுள்ளார். 'மாவீரன் சிவாஜி காவித் தலைவனல்ல! காவியத் தலைவன்' எனும் பெயரில் தமிழில் வெளிவந்துள்ள அந்நூலை செ. நடேசன் என்பவர் மொழி பெயர்த்துள்ளார். பன்சாரே இந்துத்தவவா திகளால் கொலை செய்யப்பட்டதற்கு சிவாஜி பற்றிய உண்மை வரலாற்றை எழுதியதும் ஒரு காரணம் என நம்பப்படுகிறது.

இவர்களின் தன்வயப்படுத்தும் திருட்டையும், அத்தோடு சேர்க்கப்பட்ட புரட்டையும் குறித்து அண்ணல் அம்பேத்கர், 'புத்த மதம் கொடுத்த அடியால் இடுப்பு எலும்பு ஒடிந்து போன பார்ப்பனீயம், அதனைத் தாங்க முடியாது பல்வேறு காலகட்டத்தில் எழுதிச் சேர்க்கப்பட்ட பல்வேறு புனைவுக் கதைகளைத் தொகுத்துச் சேர்த்ததே பகவத் கீதை' என்கிறார். அவர்களின் தன்வயப்படுத்தி திருடும் வேலையைச் சொல்ல அவ்வளவு காலம் ஏன் செல்ல வேண்டும்? ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு பாசகவின் தருண் விசய், வள்ளுவரை முன்னிலைப்படுத்தி அவருக்கு விழா எடுக்க முற்பட்டதும், திருக்குறளையும் திருவள்ளுவரையும் தன்வயப்படுத்தி திருடிக் கொள்ள முனைந்த சதியே! இவ்வாறு யாவற்றையும் திருடித் தன்வயப்படுத்துகிற ஆரியச் சூழ்ச்சியே தமிழர் அடையாளங்களையும், தமிழர் மெய்யியலையும் தங்களுக்கென அபகரித்துக் கொண்டது.

முருகனும், சிவனும் தமிழர் முன்னோர் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் எவருக்கும் இருக்க முடியாது. ஆனால், அவர்கள், தந்தை, மகன் என்பது வரலாற்றுப் பொய், ஆரியப்புரட்டு. அவர்கள் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த தமிழர்கள். அவர்களது பாத்திரங்களை எடுத்துக் கொண்ட ஆரியம், அதை னைப் புனைந்து, புழுகி அவற்றுள் நிறைய கதைகளைச் செருகி தனக்கான இதிகாசமாக மாற்றிக் கொண்டது. இதனைத்தான், 'குறிஞ்சிப் பொதியமலை முருகனும், அவன் தாய் கொற்றவையும் கையிலாயமலை நீலகண்டனுக்கு மகன், மனைவி ஆக்கப்பட்டனர்' எனத் தனது 'தமிழர் மீதான பண்பாட்டு படை யெடுப்புகள்' நூலில் ஐயா க. பா. அறவாணன் குறிப்பிடு கிறார்.

பொதுவாகத் தமிழர் மெய்யியல் என்பது இறந்து போன முன்னோரை நடுகல் இட்டு வணங்குவதும், இயற்கையை வழிபடுவதுமேயாகும். இறந்து போன முன்னோரை வணங்குவதால் வரம் கிட்டும் என்றோ, மழை பொழியும் என்றோ, செல்வம் பெருகும் என்றோ தமிழர் மெய்யியல் ஒருபோதும் போதிக்கவில்லை. அவர்களை வணங்கி அவர்களது வழி தொடருங்கள் என்கிறது அவ்வளவே. அதனால்தான், முன்னோர் களை சிலையாக வடித்து வணங்குகிறோம். இது பகுத்த றிவுக்கு ஒவ்வாத செயலென்றால் அது வறட்டுவாதம்! 'சிலையைக் கடவுள் எனக் கொண்டாடுவதா?' எனக் கேட்ட பெரியாரின் சிலையையே மாலை அணிவித்து மரியாதை செய்கிறோம். அதனை மூடநம்பிக்கை எனக் கூறிவிட முடியுமா? அது மூத்தோரைப் போற்றுகிற ஒரு மரபு. அதனைத் தவறென்று எவ்வாறு நாம் கூற முடியாதோ, அதனைப் போல பல நூறு ஆண்டு களுக்கு முன்பாக வாழ்ந்து மறைந்த முன்னோர்களைச் சிலையாக வைத்து வணங்குவதையும், மரியாதை செய்வதையும் தவறெனக் கூற முடியாது! ஐயனாரும், கருப்பண்ணசாமியும், மதுரை வீரனும் வாழ்ந்து மறைந்த முன்னோர்கள்தானே? ஐயனார் என்பது தனிப்பட்ட ஒருவரைக் குறிப்பதல்ல! ஔவை என்பது எப்படி பல பெண்களைக் குறிக்கும் பொதுப் பெயராக இருந்து சுட்டியதோ அதனைப் போலத்தான் ஐயனார் என்பதும்.

அத்தகைய ஐயனாரையும், கருப்பண்ணசாமி யையும், சுடலை மாடனையும் விட்டு வைத்த ஆரியம் முருகனையும், சிவனையும், கண்ணனையும், கொற்றவை யையும் திருடி, அவர்களின் பெயரை சமற்கிருதப்படுத்தி தங்களது அடையாளங்களாக நிலைநிறுத்திக் கொண்டு விட்டது. எங்கள் மூத்தவர்கள் பறிகொடுத்த சிவன், முருகன், கண்ணன், இந்திரன், வருணன், கொற்றவை எனும் மெய்யியல் அடையாளங்களை அவர்களின் வழித்தொன்றல்கள் நாங்கள் மீட்கச் செய்யும் பண்பாட்டுப் போருக்கானத் தொடக்கமே வீரத்தமிழர் முன்னணி எனும் பெரும் படையின் உருவாக்கம்.

பொதுப்புத்தியில் இருக்கிற, இந்துத்துவா கற்பித்து இருக்கிற இறை கோட்பாடு வேறு! நாம் தமிழர் கட்சி முன்வைக்கிற கோட்பாடு வேறு! நீரின்றி அமையாது உலகு எனப் பாடிய வள்ளுவன், எவ்விடத்திலும் இறையின்றி அமையாது உலக எனப் பாடவில்லை. இறைவன்தான் உலகைப் படைத்ததாகப் போதிக்க வில்லை. அவன் இறையியல் கோட்பாட்டை பின்வரு மாறு வகுக்கிறான்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*

*தெய்வத்துள் வைக்கப் படும்.*

தன் அறநெறி சார்ந்த செயலால் வாழ்க்கையில் உயர்ந்தவன் தெய்வமாக எண்ணி வணங்கப்படுகிறான். தெய்வம் எனும் கோட்பாட்டுக்கு வள்ளுவப்பாட்டன் வகுத்துத் தந்த இவ்விலக்கணத்தையே வீரத்தமிழர் முன்னணி வழி தொடர்கிறது. அவ்வாறே முருகனும், கண்ணனும், இந்திரனும், வருணனும், கொற்றவையும், ஐயனாரும், சுடலைமாடனும் எங்களுக்குத் தெய்வ மானார்கள்.

வள்ளுவப்பாட்டன் துறவு, தவம், வேள்வி போன்றவை செய்யக் கோரவில்லை. மாறாக,

*அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*

*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று*

எனக்கூறி, இல்வாழ்க்கை வாழ்வதே அறமென்று போதித்தார்.

எங்கள் பாட்டன் வள்ளலார் அணையா அடுப்பின் மூலமாக எளியவர்களின் பசியாற்றினா ரென்றால் அதனை ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே எடுத்துரைத்தவன் முப்பாட்டன் வள்ளுவன்.

*பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி*

*வேள்வி தலைப்படா தார்*

அடுப்பு நெருப்பைப் பற்ற வைத்து விருந்தோம் பலே உண்மையான வேள்வி. அதனைச் செய்ய முடியாதவர்கள்தான் பற்றற்று விட்டோம் என யாக

நெருப்பைப் பற்ற வைத்துத் துன்புறுவர் என்கிறார். இதுவே எங்களது அறம். இதுவே எங்களது மெய்யியல் முறைமை. இதுவே எங்களது இறையியல் கோட்பாடு. ஆகவே, நாங்கள் மிகத் தெளிவாக இருக்கிறோம். எங்களை எண்ணி நீங்கள் குழம்பத் தேவையில்லை அன்பர்களே!

திராவிடத்தின் மூலவர்களுள் ஒருவரான அண்ணா, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என முழங்கினார். இறையியலையே ஏற்காத நீங்கள் இறைவனென்று சொல்கிறீர்களே என எவரும் அவரிடத்தில் கேள்வி எழுப்பவில்லை? ஆனால், நாங்கள் எங்களது நடுகல் வழிபாட்டையும், மெய்யியல் கோட்பாட்டையும் மீட்டுருவாக்கம் செய்கிறபோது அதனை ஆரியச் சார்பென்று கூறி இழித்துரைக்கிறார்கள் எவ்வித வழிபாட்டையும் ஏற்காத திராவிடர் கழகம், தமிழர்கள் இயற்கையை வணங்கும் பெருநாளான பொங்கல் திருநாளை திராவிடர் திருநாள் எனக்கூறும் நகைமுரண் குறித்து எவரும் கேள்வி எழுப்ப முனைவதில்லை. ஆனால், வீரத்தமிழர் முன்னணியினை இந்துத்துவா என அவதூறு பரப்ப நாளும் அணியமாகி நிற்கிறார்கள்.

நாங்கள் எந்த இடத்தில் இந்துத்துவவாதிகளுக்கு ஆதரவாய் நின்றோம்? வாக்கரசியலுக்காக, 'திமுகவில் 90 விழுக்காடு இந்துக்கள் இருக்கிறார்கள்' என ஸ்டாலின் கூறியது போல கூறினோமா? இல்லையே! 'தமிழர்கள்தான் இந்துக்கள், இந்துக்கள்தான் தமிழர்கள்' என்று பரப்புரை செய்கிற இந்துத்துவ வாதிகளின் அடிப்படையையே அடியோடு தகர்த்து, இந்து எனும் சொல்லையே முற்றாக மறுத்து, தமிழர்கள் இந்துக்கள் அல்லர். நாங்கள் சைவர்கள், வைணவர்கள் ஏன்? சமணர்களாகவும், பௌத்தர் களாகவும் கூட இருப்போம். வரலாற்றில் ஒருபோதும் இந்துவாக இருந்ததில்லை. இந்து கடவுள்களாக சொல்லப்படுகிற முருகனும், சிவனும் இந்து என்பதே பச்சைப் பொய் என உரைத்து, இந்துத்துவாவின் ஆணிவேரில் வெந்நீரை ஊற்றுகிறோம். தாங்கள் 'இந்துக்கள்' இல்லை எனக்கூறி கர்நாடகத்தில் லிங்காயத்துகள் போராடியபோது அதனை வரவேற்று 'உண்மை' வார இதழில் தலையங்கம் எழுதிய ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், தமிழர்கள் இந்துக்கள் இல்லையெனப் பேரறிவுப்பு செய்திட்ட வீரத்தமிழர் முன்னணிக்கு ஆரியச்சாயம் பூசுவது என்ன அறம் எனத் தெரியவில்லை?

இதிகாசங்கள் யாவும் பெரும்பான்மை மக்களால் நம்பப் பெற்ற கற்பனைக்கதையே! இராமாயணமும், மகாபாரதமும் அவ்வகையைச் சேர்ந்ததே. இராமாய ணத்தில் கூறப்பட்ட இராமன் எனும் ஆரியக் குறியீ டுக்கு எதிராகக் கற்பனையாக இருந்தாலும் அக்காப்பியத்திலிருந்தே இராவணன் எனும் பாத்தி ரத்தை எடுத்தாண்டு திராவிட இயக்கங்கள் அதனை எதிர்க்குறியீடாக நிறுத்தகிறது. திராவிடக் கட்சிகள் வாக்கரசியலுக்காக இராவணனைப் பேசவோ, கொண்டாடவோ செய்வதில்லை. ஆனால், நாம் தமிழர் கட்சியின் பண்பாட்டுப் பாசறையான வீரத் தமிழர் முன்னணி இராவணனை மீண்டும் தமிழர் நிலமெங்கும் தூக்கிச் சென்று அவரைக் கொண்டாடு கிறது. அவரைத் தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நிறுவுகிறது.

இதிகாசப் புராணங்களையே ஏற்காத பெரியார், இராவணன் எனும் இதிகாசப் பாத்திரத்தைக் கையிலெடுத்து கொண்டாடியபோது அதனை முற்போக்கென ஏற்றவர்களுக்கு, ஆரியச் சகதியில் சிக்கியிருக்கிற சிவன், முருகன், கண்ணன் எனும் வாழ்ந்து மறைந்த முன்னோர்களை மீட்டெடுத்துக் கொண்டாடுகிறபோது அது பிற்போக்காகத் தெரிவது விந்தையிலும் விந்தை!

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் தமிழர்களின் ஐவகை நிலங்களில் தலைவனாக இருந்து வாழ்ந்து மறைந்தவர்கள் முறையே முருகனும், கண்ணனும், இந்திரனும், வருணனும், கொற்றவையும். தலைநிலமான குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த முருகனைக் கொண்டாடும் விதத்தில் 'திருமுருகப் பெருவிழா' நடத்தி, வீரத்தமிழர் முன்னணியைப் பழனியில் தொடங்கியபோது ஐயா சுப.வீ.எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"மாயோன் மேயக் காடுறை உலகமும் சேயோன் மேய மைவரை உலகமும் வேந்தன் மேயத் தீம்புனல் உலகமும் வருணன் மேயப் பெருமணல் உலகமும்" என்கிறது தொல்காப்பியம்! மைவரை (குறிஞ்சி) உலகத்துச் சோயோனை (முருகன்) மட்டும் வணங்கினால் போதுமா? காடுறை (முல்லை) உலகத்து மாயோனை (கண்ணன்), தீம்புனல் (மருதம்) உலகத்து வேந்தனை (இந்திரன்), பெருமணல் (நெய்தல்) உலகத்து வருணனை எல்லாம் வணங்க வேண்டாமா? அவர்களுக்கும் வெவ்வேறு நாள்களில் விழா எடுக்க வேண்டாமா?"

ஐயா சுப.வீ. அவர்கள் குறிப்பிட்டது போல, மாயோனைக் கொண்டாடுகிறோம். அவருக்கு விழா எடுக்கிறோம். அந்த மாயோன்தான் கண்ணன் எனப் போற்றப்படுகிறார். அவரைத்தான் கிருஷ்ணர் எனப் புனைந்து, ஆபாசக் கதைகளை எழுதி, அவரைப் பெண் பித்தர் போலச் சித்தரித்து இருக்கிறது ஆரியம். மாயோன் மீது பூசப்பட்டிருக்கிற கிருஷ்ணர் எனும் காவியச்சாயத்தை நீக்கத்தான் வீரத்தமிழர் முன்னணி பெரும்பணி செய்கிறது. போராடிக் கொண்டிருக்கிறது. அவ்வரலாற்றுப் பெரும் பணியினை இந்துத்துவாவிற்கு ஆதரவான வேலையெனப் பழி சுமத்துவது மோசடித் தனம்! அறிவிலித்தனம்! ஆகவே, இனிமேலாவது புரிந்து கொள்ளுங்கள். வீரத்தமிழர் முன்னணி முன்னெடுப்பது இந்துத்துவாவின் வேர்பரப்புகிற செயலல்ல! இந்துத்துவாவின் ஆணி வேரையே அறுக்கிற பெரும் பணி. ●

ஆகஸ்டு 29ஆம் நாள் சர்வதேச அணு ஆயுத சோதனை எதிர்ப்பு தினம் பிரமிப்பூட்டும் பிரமாண்டமான இந்த பூமிப் பந்தை பலமுறை வெடித்துச் சிதறவைக்கும் அளவுக்கு அணு ஆயுதங்களை தயாரித்து குவித்து வைத்திருக்கிறோம் நாம். அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா போன்ற நாடுகள் ஏறத்தாழ 13,865 அணுகுண்டுகளையும், அவற்றைக் கொண்டு போய் பிற நாடுகள் மீது போடுவதற்கான ஏவுகணைகளையும் உருவாக்கி, தயார் நிலையில் வைத்திருக்கின்றன. இத்தனைக் கொடிய அணு ஆயுதங்களை வடிவமைத்து, தயாரித்து, கையில் வைத்துக்கொண்டிருப்பது கொடிய நச்சுப் பாம்புகளோடு குடும்பம் நடத்துவது போன்றது தான்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னால் அமெரிக்காவின் தலைமையின் கீழ் முதலாளித்துவ நாடுகளும், சோவியத் ஒன்றியத்தின் தலைமைக்குக் கீழே சோசலிச நாடுகளும் இரண்டு அணிகளாக நின்று, ஒரு பெரும் பனிப்போரில் ஈடுபட்டன, ஏராளமான ஆணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் தயாரித்து இருதரப்பும் ஆயுதப் போட்டியை உருவாக்கின. இதனால் ஒட்டுமொத்த உலகமுமே பதற்றம் நிறைந்து, வளர்ச்சியை இழந்து, வறுமையில் வாடியது.

சோவியத் ஒன்றியம் உடைந்த பிறகு, கிழக்கு, மேற்கு எனப் பிரிக்கப்பட்டிருந்த நமது உலகம் வளமான வடக்கு நாடுகள், வளரும் தெற்கு நாடுகள் என்று மாறியிருக்கிறது. முதலாளித்துவ மும்மையான தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்பது அனைத்து நாடுகளின் அடிப்படைக் கொள்கையென்று ஆகி விட்டாலும், அணு ஆயுதங்களை இன்னும் அழிக்க முடியவில்லை.

நமது தெற்காசியப் பிராந்தியத்திலும் நிலைமை மோசமாகிக்கொண்டிருக்கிறது. காஷ்மீர் விவகாரத்தால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அணு ஆயுதப்போட்டி உருவாகி உச்சத்தை அடைந்திருக்கிறது. அணு வல்லரசான சீனா, பாகிஸ்தானை ஆதரிப்பதாலும், சீனாவை விரும்பாத அமெரிக்கா இந்தியா பக்கம் நிற்பதாலும் நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டிருக்கிறது.

இம்மண் மீது அமைதியான, வளமான வாழ்க்கையை நாம் தொடர்வதற்கான ஒரே வழி பயங்கரமான அணு ஆயுதங்களை பூமியிலிருந்து அறவே நீக்குவதுதான். ஆனால் மந்திரத்தால் இந்த மாங்காய் மடி விழாது. அணு ஆயுதப் பரிசோதனைகளை மேற்கொள்ளாமல் இருப்பது ஒரு முக்கியமான



# அணு ஆயுதங்களை ஒழிப்போம்

**சுப. உதயகுமாரன்,**
அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்

நடவடிக்கையாக அமைகிறது. அதாவது கைவசமிருக்கும் அணுகுண்டுகளை மேம்படுத்தி, செழுமைப்படுத்தி, நவீனமயமாக்கி, அண்மைத் தொழில்நுட்பங்களோடு அதிக சக்திகொண்ட புதிய அணுகுண்டுகளை வடிவமைப்பதற்காக நாடுகள் மேற்கொள்ளும் பரிசோதனைகளைத் தடுக்கிறது இந்த உத்தி. இதைத்தவிர அணுவெடிப்புப் பரிசோதனைகளால் உலகெங்கும் ஏராளமான மக்கள் கதிர்வீச்சுக்கும், கொடிய நோய்களுக்கும் ஆளானதும், அணுவெடிப்புப் பரிசோதனைகளுக்கு எதிரான மனநிலையை உருவாக்கியது. இந்த அணு ஆயுதப்பபரிசோதனை தடுப்பு நடவடிக்கைக்கு வலு சேர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 29ஆம் நாளை அணு ஆயுதப் பரிசோதனைக்கு எதிரான சர்வதேச நாளாக ஐ.நா.சபை அனுசரிக்கிறது. இதைப்போலவே சி.டி.பி.டி,.என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் பரந்துபட்ட அணுப் பரிசோதனை தடுப்பு ஒப்பந்தம் 1996ஆம் ஆண்டு செப்டம்பர் 10 அன்று ஐ.நா.பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஒப்பந்தம் பொதுவான மற்றும் ராணுவத்துக்கான அனைத்து அணு வெடிப்புப் பரிசோதனைகளையும் தடை செய்கிறது. ஏறத்தாழ 184 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தாலும், இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இதனை இன்னும் அமல்படுத்தவில்லை. கடந்த 1945ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையிலான பதினெட்டு ஆண்டுகால இடைவெளியில் மொத்தம் 499 அணுவெடிப்புப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அதேபோல 1964 முதல் 1996வரை 1337 பூமிக்குள்ளான அணுவெடிப்புப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. கடலுக்குள்ளும், விண்வெளியிலும் கூட அணுவெடிப்புப் பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

சோவியத் ஒன்றியம் இரகசியமாக பூமிக்குள் அணுவெடிப்புப் பரிசோதனைகள் அணுவெடிப்புப் பரிசோதனைகள் நடத்தி ஆயுதத் தயாரிப்பில் முன்னேறிவிடும் என்று அமெரிக்கத் தரப்பு அஞ்சியது. அமெரிக்கா கோரியது போன்று அணுவெடிப்புக்களை நேரடியாகக் கண்காணிப்பது என்பது உளவு நடவடிக்கை ஆகிவிடும் என்று சோவியத் தரப்பு எதிர்த்தது. இதுவரைக் கட்டுக்குள்ளிருந்த இந்தப் பிரச்சனை அண்மையில் அமெரிக்கா நடத்திய ஏவுகணைப் பரிசோதனையால் கைவிட்டுப்போகுமோ, என்கிற கவலை எழுகிறது.

இந்தியா கடந்த 1998ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம் பொக்ரான் என்ற இடத்தில் அணு ஆயுதப் பரிசோதனைகள் நடத்தியது. அந்தப் பரிசோதனைகள் வெற்றிகரமான முடிவுகளைத் தந்துவிட்டதால், மேலும் அணு ஆயுதப் பரிசோதனைகள் செய்ய மாட்டோம் என்று அறிவித்தது வாஜ்பாய் அரசு. அணு குண்டுகளை நாங்கள் முதலாவதாக பயன்படுத்த மாட்டோம் என்றும், அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகளின்மீது அணுகுண்டுகளைப் போடமாட்டோம் என்றும் இந்தியா அறிவித்தது.

ஆனால் தற்போதைய இந்திய பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ்நாத்சிங் முதலாவதாக பயன்படுத்தாமை எனும் இந்தியாவின் கொள்கை கல்லில் செதுக்கப்பட்டதல்ல, வருங்கால சூழல்களுக்கேற்ப அது மாறும் என்று அறிவித்திருக்கிறார். வாஜ்பாய் வகுத்துக் கொள்கை என்றும் பாராமல் அதை மாற்றுவதற்கு முனைகிறது மோடி அரசு, நாம் இப்படி ஒரு முடிவெடுத்தால் தான் பாகிஸ்தான் முதலாவதாக பயன்படுத்தாமை கொள்கையை ஏற்றெடுக்கும் என்று கடினப் போக்குடைய சிலர் வாதிடுகின்றனர்.

ஒரு தரப்பு அணு ஆயுதங்களை பயன்படுத்தினால், மறுதரப்பும் பலத்த தாக்குதலை மேற்கொண்டு, இரண்டு தரப்புக்களுமே இல்லாமலாகிவிடும் ஆபத்தைச் சுட்டிக்காட்டி அணு ஆயுதப்போர் ஓர் அறிவில்லா நடவடிக்கை என்று சாடுகின்றனர் மென்முறை போற்றும் பலர்.

அணு ஆயுதங்களை மட்டும் எதிர்த்துவிட்டு பிற அணுசக்தித் தொடர்பான நடவடிக்கைகளை ஆதரிப்பது என்பது பத்தாம்மபசலித்தனமானதாகவே இருக்கும். சமூகத்தை சீரழித்து சிதைக்கும் கஞ்சாவின் விற்பனையை மட்டும் தடுத்துப் பயனில்லை, கஞ்சா செடியையே எங்கும் வளர்க்க விடக்கூடாது என்று நாம் இயங்குகிறோம். அது போலவே, அணு ஆயுதங்களை மட்டும் எதிர்த்தால் போதாது, ஏராளமான அணுக்கழிவுகளையும், கதிர்வீச்சையும், வெளியிட்டு, அணுகுண்டுகள் தயாரிக்க உதவும் புளூட்டோனியத்தை உருவாக்கும் அணுமின் நிலையங்களையும் நாம் கடுமையாக எதிர்த்தாக வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னதுபோல், "புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!"

அணு ஆயுதங்களை மட்டும் எதிர்த்துவிட்டு பிற அணுசக்தித் தொடர்பான நடவடிக்கைகளை ஆதரிப்பது என்பது பத்தாம் பசலித்தனமானதாகவே இருக்கும். சமூகத்தை சீரழித்து சிதைக்கும் கஞ்சாவின் விற்பனையை மட்டும் தடுத்துப் பயனில்லை, கஞ்சா செடியையே எங்கும் வளர்க்க விடக்கூடாது என்று நாம் இயங்குகிறோம். அதுபோலவே, அணு ஆயுதங்களை மட்டும் எதிர்த்தால் போதாது, ஏராளமான அணுக்கழிவுகளையும், கதிர்வீச்சையும், வெளியிட்டு, அணுகுண்டுகள் தயாரிக்க உதவும் புளூட்டோனியத்தையும் உருவாக்கும் அணுமின் நிலையங்களையும் நாம் கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.

●

# சமூக ஆர்வலர் பியூஸ் மனுஷ் மீது சேலம் பா.ச.க.வினர்



சேலம் சின்னக்கொல்லப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் பியூஸ் மானுஷ். சமூக ஆர்வலரான இவர் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களை விமர்சனம் செய்து வாட்ஸ்அப், முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வந்தார். 28/8/19 மாலை பியூஸ் மானுஷ் சேலம் மரவனேரிப் பகுதியில் உள்ள மாநகர் மாவட்ட பாசக அலுவலகத்துக்குச் சென்று அங்கிருந்த பாசக நிருவாகிகளிடம் பொருளாதாரச் சீர்குலைவுக்குக் காரணம் என்ன? என்பன உள்பட சில கேள்விகளைக் கேட்டார்.

இதனால் அவர் களிடயே வாக்குவாதம் ஏற்பட்டது. இதற்கிடையில் இந்த சம்பவத்தை பியூஸ் மானுஷ் தனது செல்போன் மூலம் முகநூலில் நேரலை செய்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பாசகவினர் பியூஸ் மானுஷ் கழுத்தில் செருப்பு மாலை அணிவித்தனர். மேலும் அவருடைய செல்போனைப் பறித்துக் கொண்டதுடன் அவரை சரமாரியாக தாக்கினர். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் அங்கு விரைந்து சென்ற அஸ்தம்பட்டி போலீசார் பாசகவினரிடம் இருந்து பியூஸ் மானுசை மீட்டனர்.

இதையடுத்து காயம் அடைந்த அவரை போலீசார் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு போலீஸ் பாதுகாப்புடன் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டடு வருகிறது. இதனிடையே, பாசக அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைதல், மத்திய அரசு குறித்து தரக்குறைவாகப் பேசுதல், நிருவாகிகளை மிரட்டுதல் எனபன உள்ளிட்ட மொத்தம் ஏழு பிரிவுகளின் கீழ் பியூஸ் மானுஷ் மீது போலீசார் வழக்கப்புதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் பியூஸ் மானுசைத் தாக்கியதாக பாசக நிருவாகிகள் பத்துக்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து சேலத்தில் உள்ள பாசக அலுவலகத் திற்கும் பியூஸ் மானுஷ் வீட்டிற்கும் போலீசு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பியூஸ் மானுஷ், பாசக வினர் தொடர்ந்து எனக்கு சமூக வலைத்தளங்கள் மூலமாக மிரட்டல் விடுத்து வந்தனர். பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் காசுமீர் விவகாரம் குறித்து கேட்பதற்காக நான் பாசக அலுவலகத்திற்குச் சென்றேன். அப்போது அங்கிருந்த பாசகவினர் என்னைத் தாக்கிக் கொல்ல முயன்றனர். இந்தச் சம்பவம் குறித்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**சைதை மணிமாறன்.**

# கைராசி வித்வான் டி.பி.எத்ராஜன்





**ஜி. இரமேஷ்,**
திரு. டி.பி.எத்ராஜன்
அவர்களது மாணவர்.

உத்திரமேரூர் அருகே ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் திருப்புலிவனம் என்னும் ஊர் உள்ளது. நாதஸ்வரம், தவில் கலைஞர்களால் அன்பாக திருப்புலிவனத்தார் என்று அழைக்கப்படும் திரு. டி.பி.எத்ராஜன் அவர்கள் பிறந்த ஊர் திருப்புலிவனம்.

இவர் வழிவழியாக இசையை வழங்கி வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தாத்தா ஜாவளி எத்ராஜன் ஆவார். இவர் ஜாவளி வாசிப்பதில் கைதேர்ந்த நாதஸ்வர வித்வான் என்பதால் இவரது பெயருக்கு முன்பாக ஜாவளி வந்து சேர்ந்தது. இவரது தந்தை பாசியம் நாயனக்காரர் ஆவார். இவர் பல மாணவர்களை உருவாக்கி நாதஸ்வர ஆசிரியர்.

டி.பி.எத்ராஜ் அவர்கள் தனது தந்தையிடம் நாதஸ்வரம் பயின்று, பிறகு ராமேசுவரம் திரு. இராஜகோபால் அவர்களிடம் நாதஸ்வரம் பயின்றவர். திரு. எத்ராஜ் அவர்கள் அன்பானவர், நற்பண்புகள் கொண்ட மனிதர். அடக்கத்தின் மொத்த உருவமென்றே சொல்லலாம். யார் மனதும் நோகும்படி பேச மாட்டார். அன்பே தெய்வம் என்று புரிந்தவர் போன்று தோற்றமளிக்கக் கூடியவர்.

கச்சேரிகளில் அவர் வாசிக்கும் அபிப்ராயத்தின் அழகு கேட்போரை மெய்மறக்கச் செய்து விடும். கச்சேரிகளில் உடன் வாசிக்கும் தவில் கலைஞர்களை மிகவும் அன்பாக வழிநடத்தி பங்கீடாக வாசித்து எல்லோர் மனதிலும் குடிகொள்வார். நாதஸ்வரம் வாசிக்கும் போது சிரித்த முகத்துடனே வாசிப்பார். இத்துடன் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால் மாணவர்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர். அதைவிட கைராசிக்காரர். மாணவர்களுக்கு பாடம் சொல்லும் விதம், வாசித்துக் காட்டி சொல்லிக் கொடுக்கும் முறை என்று பார்த்தால் மிக மிக அற்புதமாக இருக்கும்.

மாணவர்களை விடியற்காலை 4 மணிக்கு எழுப்பிவிடுவார். மாணவர்கள் சாதகம் செய்யும் போது தவறாக இருந்தால் உடனே எழுந்து வந்து சரி செய்வார். பாடியும் காட்டுவார். பிறகு காலை வேலைகளை முடித்துக் கொண்டு காலை 6 மணிக்கு பாடம் சொல்ல உட்கார்ந்து விடுவார். முதலில் மாணவர்களின் அவரவர் பாடாந்திரத்திற்குத் தகுந்தாற்போல்

இரண்டிரண்டு மாணவர்களை அழைப்பார். பிறகு முந்தைய நாள் பாடத்தை சரி செய்து புதிய பாடம் எழுதி சொல்லித்தருவார். எதிரில் உட்கார்ந்து வாசித்துக் காட்டி, ராகம் சொல்லுவார். பிறகு அந்த ராகத்தில் உள்ள கீர்த்தனத்தைச் சேர்ந்து வாசித்துக் காட்டுவார். அவர்களை வாசிக்கச் செய்து திருத்துவார். அடுத்து இரண்டு மாணவர்களை அழைப்பார். அவர்களுக்கும் சொல்லித் தருவார். இப்படி காலை முதல் மாலை வரை சொல்லித் தருவார். உணவு நேரம் போக, கொஞ்சம் கூட ஓய்வெடுக்காமல் மாணவர்களுக்காக உழைத்தவர் என்று திரு. டி.பி.எத்ராஜன் அவர்களைச் சொல்ல முடியும்.

கிராமத்து உழவர்கள், விடியற்காலை 4 மணிக்கு நாதஸ்வர ஒலியைக் கேட்டு விட்டுத்தான் வயலுக்கு ஏர் ஓட்டச் செல்வார்கள். காலை நேரத்தில் வெகு தூரம் வரை நாதஸ்வரத்தின் ஒலி கேட்கும். அமாவாசை அன்று ஏர் ஓட்டச் செல்லும் உழவர்கள் தூங்கி விடுவார்கள். காலையில், என்ன வாத்தியாரே, இன்னைக்கு பசங்க நாயனம் வாசிக்கல? நாங்க ஏர் ஒட்டப் போகாம தூங்கிப் போயிட்டோம் என்பார்கள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? அமாவாசை அன்று மாணவர்கள் எழுந்து நாதஸ்வரம் வாசிக்க மாட்டார்கள். அமாவாசை அன்று பாடம் செய்தால் ஞாபக மறதி ஏற்படும் என்று பெரியோர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள் என்பதாலும், மாதத்தில் ஒருநாள் மாணவர்கள் ஓய்வு எடுக்கட்டும் என்று ஆசிரியர் விட்டு விடுவார். எனவேதான் அமாவாசை அன்று நாதஸ்வர ஓசை கேட்காமல், உழவர்கள் பொழுது விடியவில்லை என்று தூங்கி விடுவார்கள்.

சிறந்த நாதஸ்வர ஆசிரியராகத் திகழ்ந்த டி.பி.எத்ராஜன் அவர்களுக்கு இரண்டு மகன்கள். அவர்கள் டி.இ.ஹரிதாஸ், திரு.டி.இ.உத்ரகுமாரன் ஆவர். அவர்கள் இருவரும் சிறந்த வித்வான்கள். திரு. உத்ரகுமாரன் அவர்கள் கிருஷ்ணகிரியில் உள்ள தமிழ்நாடு அரசு இசைப்பள்ளியில் தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றி வருகிறார். இவர் வாய்ப்பாட்டு பாடுவதிலும் சிறந்தவராவார். திருப்புலிவனம் டி.பி.எத்ராஜன் அவர்கள் 1986ஆம் ஆண்டு காலமானார். இவர் 750க்கும் மேற்பட்ட மாணவர் களை உருவாக்கியவர் என்று எண்ணும் போது இவரை வணங்க வேண்டும் போல் தோன்றும்.

தற்போது உத்திரமேரூரில் சத்குரு ஸ்ரீதியாகராசர் சுவாமி நற்பணி குழு சார்பாக இவரது பெயரில் இசைப் போட்டிகள் நடத்தி மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, பரிசும் சான்றும் வழங்கி, சிறந்த வித்வான்களுக்கு விருதும் வழங்கி சிறப்பித்து வருவது போற்றத் தகுந்ததாகும். ●

# வேப்பலோடை அரசுப் பள்ளிக்கு விருது




மதுரை மாவட்டம் குளத்தூர் அருகே உள்ள வேப்பலோடை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மருத்துவர் வில்லியம் எபநேசர் அவர்களை நிறுவனராகக் கொண்ட திருமங்கலம் ஸ்டார் செண்டர் நிறுவனத்தின் மூலம் சிறந்த சுற்றுச்சூழல் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முனியசாமி தலைமை வகித்தார். சென்னை வாழ் வேப்ப லோடை நாடார் சங்கத் தலைவர் செல்லத்துரை, மனோகரன், உதவித் தலைவர் சின்னகுரு சாமி, செயலாளர் ஆறுமுக லிங்கம், முத்துமாலை, அன்னை தெரசா சங்கப் பொருளாளர் முத்துக்கிருஷ்ணன், ஒருங்கிணைப் பாளர்கள் புங்கராஜ், துரைராஜ், முருகேசபாண்டி, கருப்பசாமி, சக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அன்னை தெரசா சங்கச் செயலாளர் ஜேம்ஸ் அமிர்தராஜ் வரவேற்றுப் பேசினார். பள்ளித் தலைமை ஆசிரியர் சேகர், வில்லியம், எழுத்தாளர் சரவணன், ஆத்திச்சாமி ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து பள்ளிக்கு 115 மரக்கன்றுகள் வழங்கினர். உதவி தலைமை ஆசிரியை புளோரிடா நன்றி கூறினார்.

# வாக்காளர் சரிபார்ப்பு

வாக்காளர் சரிபார்ப்பு திட்டம் (இ.வி.பி) என்ற புதிய திட்டத்தை இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்த உள்ளது. செப்டம்பர் ஒன்றாம் நாள் முதல் முப்பதாம் நாள் வரை இந்த திட்டம் செயல் பாட்டில் இருக்கும்.

இதன் மூலம் ஒவ்வொரு வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் உள்ள தனது பெயர், பிறந்த நாள், முகவரி, புகைப்படம் உள்ளிட்ட விவாரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமானால் அவரவரே அந்த திருத்தங்களை மேற்கொள்ள முடியும். இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி தவறுகளை வாக்காளர்கள் திருத்திக்கொள்ளலாம்.

இந்த வசதி என்.வி.எஸ்.பி. என்ற இணையதளத்தில் உள்ளது. இதற்கான செயலி செப்டம்பர் 1ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கும். அதில் கொடுக்க வேண்டும். எந்த விவரத்தில் மாற்றம் செய்ய வேண்டுமோ, அதற்கான தேர்தல் ஆணையத்தால் அங்கிகரிக்கப்பட்ட ஆவணங்களில் ஒன்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். அதாவது, பாஸ்போர்ட், வாகன ஓட்டுனர் உரிமம், ஆதார் அட்டை, ரேஷன் அட்டை, நிரந்தர கணக்கு எண் (பான் அட்டை) உள்ளாட்சி அமைப்புகள் அளிக்கும் பிறப்புச் சான்றுகள், பள்ளியில் இருந்து பெறப்பட்ட மாற்றுச்சான்று பத்தாம் வகுப்பு எட்டாம் வகுப்பு மற்றும் ஐந்தாம் வகுப்பு ஆகியவற்றை முடித்து அதனுடைய மதிப்பெண் சான்றிதழில் பிறந்ததேதி இருந்தால் அதன் நகல், வருமான வரி கணக்கு தாக்கல் செய்த விவரத்தின் நகல், சமீபத்திய தண்ணீர் கட்டண ரசீது, அல்லது தொலைபேசி ரசீது, மின்கட்டண ரசீது, எரிவாயு இணைப்பு ரசீது (விண்ணபப்த்தாரின் பெயர் அல்லது அவர்களது பெற்றோர் பெயர் இருக்க வேண்டும்). விண்ணப்பதாரரின் பெயர், முகவரியிட்ட தபால் உறை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பதிவேற்றம் செய்யலாம்.

இதை பதிவேற்றம் செய்த பிறகு வாக்குச்சாவடி அளவிலான அலுவலர்கள், வீட்டுக்கு வந்து சரிபார்ப்பார்கள். அது சரி என்று தெரிந்த பிறகு வாக்காளர் பட்டியலில் அந்த திருத்தங்களைச் செய்வார்கள். இதை அனைத்து வாக்காளர்களும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.



நீக்கப்பட்ட வாக்காளர்கள் யாரும் இருந்தால், அவர்களின் வாக்காளர் எண்ணை அதில் செலுத்திப் பார்க்க வேணடும். இல்லாவிட்டால், அவர் தனது பெயரை சேர்க்க அதற்கான விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்யலாம்.

இதற்கான இணையதளம் மற்றும் செயலி ஆகியவை செப்டம்பர் ஒன்றாம் நாள் செயல்பாட்டுக்கு வரும். முதல்முறையாக பெயர் பதிவு செய்ய விரும்புகிறவர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். பதிவேற்றம் செய்யும்போது அந்த இணையதளத்தில் இருந்து தகவல் அனுப்பப்படும்.

செப்டம்பர் 30ஆம் நாள் வரை மட்டுமே இந்த வாய்ப்பு அனுமதிக்கப்படும். இதில் வாக்காளர்கள் பதிவேற்றம் செய்யும் திருத்தங்கள், ஆவணங்கள் அனைத்தும் அக்டோபர் 15ஆம் நாளுக்குள் வாக்குச்சாவடி அளவிலான அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டுவிடும்.

கம்ப்யூட்டர் போன்ற வசதி இல்லாதவர்கள், கிராமப் புறங்களில் உள்ளவர்கள் ஆகியோர் இசேவை மையங்களுக்குச் சென்று சரிபார்க்கலாம். ஒரு பதிவுக்கு ரூ.1 மற்றும் 18 சதவீதம் ஜி.எஸ்.டி என்ற அளவில் ரூ.1.18 செலுத்தினால் போதும். ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் பதிவேற்றம் செய்யும் வசதியும் உள்ளது.

**வழக்கமான சரிபார்ப்பு**

அதன் பிறகு வழக்கமாக மேற்கொள்ளப்படும் சிறப்பு சுருக்கமுறை திருத்தப்பணிகள் அக்டோபர் 15ஆம் நாள் முதல் தொடங்கும். அதற்கான வரைவு வாக்காளர் பட்டியல் அன்று வெளியிடப்படும். இந்தப் பணிகள் நவம்பர் 30ஆம் நாள் வரை நீடிக்கும்.

இந்த காலகட்டத்திலும் திருத்தங்கள், பெயர் சேர்ப்பு போன்றவற்றை மேற்கொள்ளலாம். இதற்காக நவம்பர் 2,3,9 மற்றும் 10நாட்களில் (சனி, ஞாயிற்றுக்கிழமைகள்) சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

இந்த இரண்டு வகைகளிலும் வாக்காளர் பட்டியலை சரிபார்த்துவிட்டு, வரும் ஜனவரி 1 முதல் 15ஆம் நாளுக்கு இடையில் ஒரு நாளில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

புதிய திட்டம் பற்றி அனைத்துக்கட்சிகள் கூட்டத்தில், வாக்காளரின் ஆதார் எண்ணை வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு கட்சி மட்டும் முன் வைத்துள்ளது.

வாக்காளர்கள் பெயர் நீக்கம் குறித்த விவரங்களை கட்சியின் வாக்குச்சாவடி முகவர்கள் மூலம் கேட்டறிய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்காக ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு முகவரை நியமிக்க அரசியல் கட்சிகளை கேட்டுக்கொண்டோம் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சாகு தெரிவித்தார்.

**ஜெயவேல்.**

## விபத்தில் சிக்கியவரை காப்பாற்றினால்
## ரூ.5 ஆயிரம் பரிசு



புதுச்சேரியில் 2019-20 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை முதல்-அமைச்சர் நாராயணசாமி தாக்கல் செய்தார். அப்போது, எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் குறித்து பிரச்சனை எழுப்பினார்கள். மேலும் கடந்த ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டதையே நிறைவேற்றாத நிலையில் தற்போது வெற்று பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதாக கூறி சபாநாயகர் இருக்கை முன்பு தர்ணாவில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து என்.ஆர்.காங்கிரஸ், அ.தி.மு.க. பாரதீய ஜனதா எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில் முதல்-அமைச்சர் பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றினார். இந்த பட்ஜெட் ரூ.8,425 கோடியில் தயாரிக்கப்பட்டிருந்தது.

சாலை விபத்தில் சிக்கியோரை காப்பாற்றி உடனடியாக மருத்துவ வசதி கிடைக்கும் படி அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யும் நபருக்கு ரூ.5 ஆயிரம் பரிசு வழங்கப்படும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

வேளாண் பயிர் உற்பத்தி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு முன்பு இருந்ததை விட இருமடங்கு உயர்த்தி மானியம் வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ரூ.16.15 கோடி கூடுதல் செலவாகும்.

சிறுதானிய பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வீதமும், பயறு வகை பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் வீதமும் மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ரூ.76.72 லட்சம் கூடுதல் செலவாகும். மேலும் மீனவர் நிவாரணத்தொகை உயர்வு, காவல் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புதல், புதுச்சேரி துறைமுக தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை முதல்வர் மாண்புமிகு. நாராயணசாமி அறிவித்தார்.

***மருத்துவர் வில்லியம் எபநேசர்.***

சோளகர் மலையில் மக்களுடன் இணைந்தே ஊராளிகள் என்ற சமூக மக்களும் வசிக்கிறார்கள். வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் அனைத்திலும் இவர்களுக்குள் பெரிய வேறுபாடுகள் இல்லை. ஆனால், ஊராளி மக்களுக்கு என்று ஒரு தனிக்கலை இருக்கிறது. பண்டைய காலம் தொட்டு அவர்கள் இந்த கலையை அழியாத சொத்தாக பாதுகாத்து வருகிறார்கள் என்ற தகவல் ஆச்சரியத்தை அளித்தது. அது பீனாச்சி என்ற மத்தள இசைக்கலை.

தாளவாடி கிராமத்தில் இருந்து கர்நாடக எல்லைக்குள் இருக்கும் சாலைக்குள் பயணம் தொடங்கியது. கோரிபாளையம், புளிஞ்சூர் பகுதி களைத் தாண்டி மீண்டும் தமிழக எல்லையான ஆசனூர். சற்று தொலைவிலேயே பலாப்பழங்கள் சாலையோரத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளன. தேன், மிளகு உள்ளிட்ட பொருட்களையும் விற்கிறார்கள். அவை அனைத்தும் கலப்படமில்லா தவை. அவற்றை வாங்க அந்த வழியாகச் செல்லும் பெரும்பாலான வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

ஆசனூர் ஒரு சிறு கிராமப்பகுதி. ஆனால் பெரிய வனப்பகுதி. இது மான்கள் துள்ளி ஓடும் பகுதி, கவனமாகச் செல்லவும் என்று அறிவிப்பு பலகை வைக்கப்பட்டு இருக்கும் சாலை, நிஜமாகவே மான்கள் நம்முன்னால் துள்ளிச்சென்றன. சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையில் முளைத்த சிறு புற்களை, குட்டிகளுடன் சேர்ந்து மேயும் மான் கூட்டத்தையும் பார்க்க முடிகிறது. மயில்களும் அங்கு நடமாடுகிறது. மானும் மயிலும் இணைந்தே நின்றால் பார்க்க குதூகலமாகத்தானே இருக்கும். தேசிய நெடுஞ்சாலை யோரமாக தீயணைப்பு நிலையம், காவல் நிலையம், வன அலுவலகம் என்று நகரத்தில் இருக்கும் அலுவ லகங்கள் இங்கேயும் இருந்தாலும் அமைதியாகவே இருக்கிறது ஆசனூர்.

அங்கே குச்சிகளை மதில்சுவராகக் கொண்டிருக் கிறது பீனாச்சி இசைக்கலைஞரின் வீடு. குச்சிகளால் நுழைவுவாயிலும் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக் கிறது. அதை எப்படி திறப்பது என்று நாம் மேலும் கீழும் பார்க்க, இதோ வந்துட்டேன்ங்க. என்றபடியே



# சோளகர் தொட்டி

**மத்தளமும், பறையும் அனைத்து இசை கலாச்சாரங்களிலும் இருக்கின்றன. ஆனால் பீனாச்சி மட்டும் எங்கள் இசைச்சொத்து என்று கூறும் மகாதேவன், இளைஞர்களுக்கு பீனாச்சி இசையை கற்றுக்கொடுத்து இருக்கிறார்.**

வெளியே வந்தார் அவர். அவரது பெயர் மகாதேவன், வயது 63. சத்தியமங்கலம் மலைவாழ் மக்களுக்கான பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர், ஓய்வுக்கு பின்னர் சமவெளியில் குடிபெயர்ந்து விடாமல், ஆசனூரில் பீனாச்சி, மத்தளம் ஆகிய இசைக் கலைகளை, வளரும் தலைமுறைகளுக்கு கற்றுக் கொடுக்கும், ஆதிவாசிகள் கலைக்கூடத்தில் உறுப்பின ராக இருக்கிறார்.

"நான் ஊராளி இனத்தை சேர்ந்தவன். கெத்தேசால் கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். அங்கிருந்து ஆசனூர் வந்து விட்டேன். இது எனது மனைவியின் ஊர்" என்று தன்னைப்பற்றி கூறிய மகாதேவன், நம்மிடம் காட்டுவதற்காக பீனாட்சி இசைக்கருவியை எடுத்து வந்தார்.

ஒன்றரை அடி நீளத்தில் பார்ப்பதற்கு நாதஸ்வரம் போன்று இருக்கிறது பீனாச்சி. மூங்கில் குழலில் 6 துளைகள் போடப்பட்டுள்ளது. நாதஸ்வரம், புல்லாங் குழலில் எல்லாம் 7 துளைகள் இருக்குமே...என்று கேட்டால், பீனாச்சிக்கு 6 துளைகள்தான். 6 துளைக ளிலும் ஏழுஸ்வரங்களையும் வாசித்துவிடு வோம் என்றார்.

பீனாச்சியில் வாய் வைத்து ஊதும் இடத்தில் மூங்கில் துளை அடைக்கப்பட்டு ஒரு சிறு குச்சி சொருகும் அளவுக்கு துளை இடப்பட்டு உள்ளது. அதில் ஒரு உலோக தகடு வைக்கப்பட்டு அதன் மீது பில்லுவை பொருத்துகிறார்கள். பில்லுவை ஒரு வகை புல்லில் பீனாச்சி இசைக்கலைஞர்களே தயார் செய்கிறார்கள். மறுபுறம் ஒரே மரத்துண்டில் குடைந்து உருவாக்கப்பட்ட புனல் வடிவ பகுதி உள்ளது. புனல் வடிவ பகுதி பலாமரத்து வேர், குமுளி மரத்து வேர், மூங்கில் வேர், எருக்கிலை வேர் இவற்றில் ஏதாவது ஒன்றில் செய்யப்படுகிறது. வாய்ப் பகுதியில் வைக்கப்படும் உலோகத்தகடு இரும்பு, பித்தளை என்று அவரவர் விருப்பப்படி வைத்துக்கொள்கிறார்கள்.

மூச்சை நன்றாக உள்ளே இழுத்து பீனாச்சியில் காற்றைச் செலுத்த, துளைகள் வழியாக வெளியேறும் காற்று இசையாக மாறுகிறது. இதற்கு உறுதுணையாக மத்தளம் இசைக்கு கலைஞர்கள் மத்தளத்தையும், பறையும் இசைக்கிறார்கள்.

மத்தளமும், பறையும் அனைத்து இசை கலாச்சாரங்களிலும் இருக்கின்றன. ஆனால் பீனாச்சி மட்டும் எங்கள் இசைச்சொத்து என்று கூறும் மகாதேவன், இளைஞ்ர்களுக்கு பீனாச்சி இசையை கற்றுக்கொடுத்து இருக்கிறார்.

"ஊராளிகள் இல்லத்து காது குத்து, சீர், திருமணம், மரணம் மற்றும் கிராமக்கோவில் திருவிழா எதுவாக இருந்தாலும் பீனாச்சி இசைக்கு முக்கியத்துவம் உண்டு. இப்போது பீனாச்சி இசைக்க பலருக்கும் தெரிவதில்லை. அல்லது கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை. அந்தக்காலத்தில் எங்களுக்கு பொழுதுபோக்கு எல்லாமே இசைதான். அது ஒரு காலம்,...நாங்கள் பிறக்கும் முன்பே இந்த பகுதிக்கு ஆங்கிலேயர்கள் வந்திருக்கிறார்கள் தெரியுமா?" என்று நம்மிடம் கேட்டுவிட்டு அவரே தொடர்ந்தார்...

"இதோ இப்போ இருக்கிற இந்த ரோடு ஆங்கிலேயர் காலத்தில் போடப்பட்டது. திம்பம் மலையில் ஏறிவருகிற 14 கிலோ மீட்டர் தூரம் 27 கொண்டை ஊசி வளைவுகளோட இருக்குமே...அதுஇ ஆங்கிலேயர் மலை வழியாக ரோடு போட்டவங்க மைசூர் சுல்தான்கள்தான். திப்பு சுல்தான் காலத்தில் முக்கிய ரோடு அணையின் பின் பகுதியில் இருந்து தெங்குமரகடா செல்லும் வழியில் அந்த ரோடு பிரிகிறது. ஒரே ஒரு கொண்டை ஊசி வளைவுதான் உண்டு. அத்தனை நேரான சுலபமான ரோடு.

எங்கள் ஆதிவாசி மலை மக்கள் அனைவருக்கும் அந்த ரோடு தெரியும். சத்தியமங்கலம் போக வேண்டும் என்றால் அந்த வழியாக நடந்து போய்விட்டு வந்து விடுவோம். ஆனால் வனத்துறை அந்தப் பாதையை அடைத்து விட்டது. சுல்தான்ரோடு மட்டும் திறக்கப்பட்டால் இதோ ஆசனூரில் இருந்து கர்நாடகா எல்லைப்பகுதிக்கு போகாமலேயே தாளவாடிக்குடப போக முடியும். வாகனங்கள் திம்பம் மலையில் அவ்வப்போது நின்று போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதும் தடுக்கப்படும்" என்றார் மகாதேவன்.

நன்றி : **தினத்தந்தி**



தன் வசீகரக் குரலால் தமிழ் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த நடிகர், எம்.கே.டி என்று அன்போடு அழைக்கப்பட்ட எம்.கே.தியாகராஜ பாகவதர் சுருக்கமாக எம்.கே.டி என அழைக்கப்படும் இவர் தமிழ் திரைப்படத் துறையின் முதல் நட்சத்திர அந்தஸ்து பெற்ற உயர் நட்சத்திர கதாநாயகனும் மிகச்சிறந்த கர்நாடக சங்கீத தமிழ் பாட கரும் ஆவார்.

1934 ஆம் ஆண்டு பவளக்கொடி என்கிற திரைப்படத்தில் கதாநாயகனாக அறிமுகமான இவர் சுமார் 15 தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார். அதில் 6 படங்கள் மிகப்பெரிய வெற்றிப் படங்களாகும். 1944 இல் வெளியிடப்பட்ட இவரின் சாதனைப்பட மான ஹரிதாஸ் 3 ஆண்டுகள் ஒரே திரையரங்கில் (சென்னை பிராட்வே திரையரங்கு) ஓடி 3 தீபாவளிகளைக் கண்ட ஒரே இந்தியத் திரைப்படம் என்ற சாதனையை அன்றைய காலகட்டத்தில் பெற்றது.

இயற்பெயர் மாயவரம் கிருஷ்ண மூர்த்தி தியாகராஜன் பிறப்பு மார்ச் 1,1910 மாயவரம், தமிழ்நாடு, இந்தியா இறப்பு நவம்பர் 1, 1959 (அகவை 49) வேறு பெயர் எம்.கே.டி. நடிப்புக் காலம் 1934 - 1959 பெற்றோர் கிருஷ்ணமூர்த்தி மாணிக்கத் தம்மாள்.

தியாகராஜன் இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள மாயவரத்தில் (தற்பொழுது மயிலாடுதுறை), விசுவகர்மா பொற்கொல்லர் குடும்பத்தில் 1910 மார்ச் முதல் தேதி கிருஷ்ணமூர்த்தி மாணிக்கத்தம்மாள் தம்பதியின் மகனாக பிறந்தார். பல நாடகங்களில் பெண் வேடம் (அயன் ஸ்த்ரீ பார்ட்) புனைந்து நடித்த கிருஷ்ணமூர்த்தி தன் குடும்பத்துடன் திருச்சிக்குச் சென்று உய்யக்கொண்டான் ஆற்றுப்பாலத்திற்கு நகைவேலை செய்தார். தியாகராஜனுக்கு கோவிந்தராஜன் எனும் தம்பியும், ஒரு தங்கையும் இருந்தனர்.

# ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர்

கலைஞர்களைச் சிகரத்தில் ஏற்றி வைத்துக் கொண்டாடுவதும், பாதாளத்தில் வீழ்த்தி மண்ணைக் கவ்வ வைப்பதும் திரைக்கலைதான்!

திரையில் மின்னும் நட்சத்திரத்துக்குப் பின்னால் ஓராயிரம் எரிநட்சத்திரங்கள் மண்ணில் விழுந்து கருகி இருக்கக்கூடும். ஓராயிரம் எரிநட்சத்திரங்களின் தோல்வியைவிட மின்னும் ஒற்றை நட்சத்திரம் தரும் நம்பிக்கை அளவற்றது. திரைக்கலை, என்றும் தீராத புகழ் போதையை தனக்குள் வைத்துக்கொண்டு கலைஞர்களை ஈர்க்கிறது. தென்னிந்தியாவின் முதல் பேரொளி நட்சத்திரமாக ஒளிர்ந்தவர் எம்.கே.தியாக ராஜ பாகவதர், காதுகளில் வைரக் கடுக்கண், விரல் களில் வைர மோதிரங்கள், பளபளக்கும் பட்டாடை, தோளில் தவழும்பட்டு அங்கவஸ்திரம், பாக்கெட்டில் தங்கப்பேனா, மணக்கும் ஜவ்வாது என தன்னுடைய நட்சத்திர அந்தஸ்துக்கு ஏற்றார் போலவே வளைய வந்தவர்.

அற்புதமான குரல் வளம், குரல் வளத்தை வசீகர மாக வெளிப்படுத்தும் திறன், பொன்னிறத்தில் கவரும் தோற்றம், எடுப்பான நாசி, காந்தக் கண்கள், சுருள் சுருளான நீண்ட முடிக்கற்றைகள் என அழகனாகவும் இருந்த பாகவதர் ரசிகர்களைக் கவர்ந்தார்.

ஏழு சுரங்களையும் தன்னிடம் வசீகரமாக்கிக் கொண்ட தியாராஜருக்கு ஏழிசை மன்னர் என்ற பட்டமும், கவரும் பேரெழிலையும் கொண்டதால் எழிலிசை மன்னர் என்ற பட்டமும் பொருத்தமாகவே இருந்தன.

பாடகர்களாக இருப்பவர்களே நடிகர்களாக முடியும் என்ற காலகட்டத்தில், நிறைய பாடகர்கள் நடிக்க வந்தாலும், பாகவதரின் இடத்தை யாராலும் எட்ட முடியவில்லை. கர்நாடக இசையை இசையறியாத எளிய மக்களும் அனுபவித்து ரசிக்கும் வண்ணம், பாகவதரின் பாடல்கள் வசீகரமானவை. அவரின் மன் மத லீலையை வென்றார்? வதனமோ சந்திர பிம்பமோ போன்ற எண்ணற்றப் பாடல்கள் இன்றும் கேட்பவரை ஈர்ப்பவை.

திருச்சியில் பிறந்து வளர்ந்த பாகவதரின் தந்தையும் நாடகத்தில் ஈடுபாடு கொண்டவர். பாகவதரின் திறமையை, அவருக்குள் இருந்த இசையாற்றலை இளமையிலேயே அடையாளம் கண்டு கொண்டவர் வயலின் வித்வான் பொன்னு ஐயங்கார். பாகவதரின் திறமையைக் கண்டு வியந்த அவர் சன்மானம் பெற்றுக் கொள்ளாமலேயே தியாகராஜருக்கு வயலின் கற்றுத் தருகிறார். மாணவனின் அரங்கேற்றுக்குப் புகழ் வாய்ந்த வித்வான்களை அழைக்கிறார். சின்னப் பையனின் கச்சேரிக்குத் தாங்கள் வாசிப்பதா என ஒருவரும் வரவில்லை. பொன்னு ஐயங்கார் தானே வயலின் வாசிக்க முன்வருகிறார். புகழ்பெற்ற புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிரா வாசிக்க முன் வருகிறார். அரங்கேற்றம் அன்றே தியாகராஜன், பாக வதர் ஆகிறார். இன்றும் பாகவதர் என்றால் அது தியாகராஜர்தான்.

## புகழின் உச்சியில் இருக்கும்போதுதான் பாகவதர் வாழ்வில் லட்சுமிகாந்தன் கொலை வழக்கு சூறாவளியாக வந்து சேர்ந்தது. பிரபலங்களின் அந்தரங்கத்தின் மேல் கதைகளைப் புனைபவர்கள் அன்றும் இன்றும் என்றும் இருக்கிறார்கள்.

1931ல் தென்னிந்தியாவின் முதல் பேசும் படமான காளிதாஸ் வெளியாகிறது. 1934ல் தமிழகத்தில் வெளி யான 7வது படமான பவளக்கொடியில் கதாநாயகனாக அறிமுகமாகிறார் பாகவதர். கதாநாயகி, எஸ்.டி.சுப்பு லட்சுமி. பவுன் 15 ரூபாய்க்கு விற்ற அந்தக் காலத்தில், பாகவதரின் முதல் படச் சம்பளம் ரூ.4,500 விரை விலேயே அவரின் சம்பளம் லகரத்தைத் தொடுகிறது. அக்காலத்தில் முழுப்படத்துக்கே தயாரிப்புச் செலவு 50 ஆயிரம்தான் ஆகும். லட்சங்கள் கொடுத்தும் பாக வதரை கதாநாயகனாக நடிக்க வைக்கத் தயாரிப் பாளர்கள் விரும்பியதற்குக் காரணம், படத்தின் வசூல் தான். 1934 முதல் 1944 வரை பாகவதர் நடித்தப் படங்கள் மொத்தம் 9. அனைத்து படங்களும் வசூலை அள்ளின. தயாரிப்பாளர்கள் பண மழையில் நனைந் தார்கள். திரையரங்கைத் தவிர வேறெங்கும் திரைப் படம் பார்க்க வாய்ப்பில்லாத காலத்தில், பாகவதரின் பாடல்களைக் கேட்டு மகிழ்வதற்காகவே மக்கள் ஒவ்வொரு படத்தையும் பலமுறை பார்த்தார்கள். பாகவதரின் படங்கள் எல்லாமே 50 வாரங்கள், 100 வாரங்கள் ஓடியவை. அவர் நடித்த ஹரிதாஸ் 1944ஆம் ஆண்டு தீபவாளிக்கு வெளியானது, அடுத்து வந்த இரண்டு தீபாவளிக்கும் தொடர்ந்து ஓடியது. 110 வாரங்கள் ஒரு திரையரங்கில் ஓடிய ஒரே திரைப்படம் பாகவதரின் ஹரிதாஸ் படம்தான். பாகவதரின் இனிமையான குரலும், கலைவாணரின் நகைச்சுவையும், இளங்கோவனின் வசனங்களும், பாபநாசம் சிவனின் பாடல்களும் பாகவதர் படங்களின் வெற்றிக்கூட்டணி.

திரைக்கலைஞர்களைப் போல் சிகையலங்காரம், ஆடையலங்காரம் செய்துகொள்ளும் போக்கு முதன் முதலில் பாகவதரில்தான் தொடங்கியது. அப்போ தெல்லாம் பாகவதர் கிராப் வெகு பிரபல்யம். அவர் செல்லும் இடங்களில் எல்லாம் அவரைப் பார்க்க மக்கள் திரண்டனர். கணிசமான எண்ணிக்கையில் பெண்களும் அடக்கம்.

புகழின் உச்சியில் இருக்கும்போதுதான் பாகவதர் வாழ்வில் லட்சுமிகாந்தன் கொலை வழக்கு சூறாவளி

யாக வந்து சேர்ந்தது. பிரபலங்களின் அந்தரங்கத்தின் மேல் கதைகளைப் புனைபவர்கள் அன்றும் இன்றும் என்றும் இருக்கிறார்கள். பிரபலங்களின் அந்தரங்கத் தைத் திரித்து எழுதி, பணம் பறித்து பலருக்குப் பெரும் தலைவலியாக இருந்த இந்து நேசன் என்ற மஞ்சள் பத்திரிகையின் ஆசிரியர் லட்சுமிகாந்தன் கொல்லப்படு கிறார். கொலை நடந்த 48 நாட்களுக்குப் பிறகு, அக்கொலை வழக்கில் பாகவதரும் கலை வாணரும், குற்றவாளிகளாக சேர்க்கப்படுகிறார்கள்.

கலை உலகமே கண்ணீரில் மிதந்தது. விதியின் மீது நம்பிக்கை கொண்ட பாகவதரும், கடவுளின் மீது நம்பிக்கையற்ற பகுத்தறிவுவாதி கலைவாணரும், தங்கள் வாழ்வில் நேர்ந்த இத்துன்பத்துக்குக் காரணமறிய முடியாமல் திகைத்தார்கள். வாழ்வின் போக்கையே மாற்றிவிட்ட சூதின் கயிறு மாபெரும் இரு கலைஞர்கள் கழுத்தில் சுருக்காக விழுந்தது. திருவாழத்தான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்பது போல், லட்சுமிகாந்தன் உயிரோடு இருந்து கொடுத்த துன்பத்தைவிட, இறந்து கொடுத்த துன்பம் அதிகம்.

பாகவதர், கலைவாணர் இருவரும் குற்றவாளிகள் என்பதற்கு ஆதாரமில்லை. இருந்த ஒரு சாட்சியமும் பொய் என நீதிபதியால் விவரிக்கப்படுகிறது. விடுதலையாகி விடக்கூடிய சாதகமான சூழலில் இருவருக்கும் ஆயுள் தண்டனை கிடைக்கிறது. தங்களின் கலை உலக வாழ்க்கை அஸ்தமித்த வலி இருவருக்கும். வழக்கு உயர் நீதிமன்றத்துக்குப் போகி றது. பெரும் துரதிர்ஷடம் அவர்களின் கால்களைச் சுற்றிக் கொள்கிறது. மறுவிசாரணையே மேற்கொள் ளாமல் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர் நீதிமன்றமும் உறுதி செய்கிறது. அஸ்தமன சூரியன் போல் இருவரும் பொலிவிழந்தார்கள். ஆனாலும் நம்பிக்கை இழக்காமல், லண்டனில் இருந்த “பிரிவி கவுன்சில்“ என்ற உச்சநீதி மன்றத்துக்கு வழக்கைக் கொண்டு செல்கிறார்கள்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லா நாடுகளில் இருந்தும் மேல்முறையீட்டுக்கு வழக்குகள் இங்குதான் வரவேண்டும். நிலுவையில் இருக்கும் வழக்குகள் விசாரணைக்கு வரவே நீண்ட காலம் பிடிக்கும். இறுதியாக 2 ஆண்டுகள், 2 மாதங்கள், 13 நாட்கள் சிறையில் இருந்த இருவரும் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டார்கள்.

சிறையில் இருந்து விடுதலையான இருவரும் தங்களின் கலை வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள். ஆனால், திரையுலகில் பிரகாசிக்கும் ஒருவரின் பயணத்தில் சிறு இடைவெளி விழுந்தாலும், அவர்களின் திரையுலக வாழ்க்கை சோதனைகளையே சந்திக்கும். அடுத்து வந்த 12 ஆண்டுகளில் வெற்றியை ஈட்டவில்லை. ரசிகர்களின் ரசனை மாறிவிட்டிருந்தது.

கடைசிப் படமான சிவகாமியில் நடித்துக் கொண்டிருக்கும்போது அவருக்குச் சர்க்கரை நோயின் அளவு அதிகமானது. இன்சுலின் போட்டுக் கொண் டாலும் முறையான மருத்துவம் செய்து கொள்ளாத தால், கண்பார்வை குறைந்தது. கடவுளின்மேல் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட அவர் தஞ்சை மாரியம்மன் கோயிலில் 45 நாட்கள் தங்கி, அம்மனைப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தார். அவர் நம்பிக்கையினால் அவரின் கண்பார்வை சரியானதாகச் சொல்லப்பட்டது.

சிவகாமி படத்தை முடித்துக்கொடுக்க வேண்டும் என்பதற்காக சேலத்தில் தொடர்ந்து படப்பிடிப்பில் இருந்தார். இடையில் ஒருநாள் சேலத்தில் இருந்து பொள்ளாச்சிக்கு கச்சேரிக்குச் சென்றார். 3 மணி நேரம் கச்சேரி. கச்சேரிக்கு வந்திருந்த ஒரு சாமியார், அவரின் கால் வீக்கம் குறைய சுரைக்காய்க் கொடி சூப் ஒன்று தயாரித்துக்கொடுத்து குடிக்கச் சொன்னார். எந்த எச்சரிக்கை உணர்வும் இல்லாமல் வாங்கிக் குடித்த பாகவதருக்கு, சுரைக்காய் சூப் மரணத்தின் தூது வனானது.

மூச்சுத் திணறலும் உடல் ஒவ்வாமையும் ஏற்பட் டதால் உடனடியாக சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஏழு சுரங்களால் நிரம்பியிருந்த அவரின் ரத்தத்தில் ஒவ்வாமையின் நஞ்சு கொஞ்சம் கொஞ்சமாக கலக்கிறது. இசையின் இனிமை நிரம்பியிருந்த இதயம், அதிக சர்க்கரையால் ஸ்தம்பிக்கிறது. தம்புராவின் சுருதியைப் போல் இசைத்த நாடித் துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது. அவரின் சீடர் ரத்தினப்பா, தியாக பிரம்மத்தின் பாடல்களைப் பாட, பாகவதரின் உதடுகளும் இறைவனின் நாமத்தை உச்சரிக்கின்றன. இனிய இசையை எழுப்பி, அதிர்ந்து அடங்கும் வீணையின் தந்தியைப் போல் பாகவதரின் உடல் அதிர்ந்து அடங்குகிறது.

மண்ணில் எத்தனையோ கலைஞர்கள் பிறக்கி றார்கள். புகழ் பெறுகிறார்கள், மறைகிறார்கள். முதிர்ந்த பருவத்தில் மெல்ல உதிரும் சருகினைப்போல் வாழ்வு அடங்கிப் போகிறவர்கள் மரணம் இயற்கையானது. ஏற்கக்கூடியது. இயற்கையின் சூறாவளியில் வேருடன் சாய்க்கப்பட்ட மரத்தைப் போல், பயணத்தின் நடுவில் நேரும் மரணம் துயர் நிரம்பியது. தாங்க இயலா வேதனையைத் தருவது. பாகவதரின் மரணமும் நினைக்கும் கணந்தோறும் தீரா துயர் தருவது. இசைக் கப்படாத ராகங்களுடன் தம்புராவைப் போட்டுடைத் தத் துயரம்.

தமிழ் திரையுலகின் முதல் சூப்பர் ஸ்டார் தியாகராஜ பாகவதர். அவரைப்போல் பணம், புகழில் புரண்டவர்களும் இல்லை, பசி, பிணியில் வாடியவர் களும் இல்லை.

தங்கத் தட்டில் சாப்பிட்டு அரண்மனையில் வாழ்ந்த பாகவதர் கடைசி காலத்தில் வீட்டு வாடகை கூட கொடுக்க வழியில்லாத ஓர் அவலமான சூழலில் பத்திரிகை என்ற பலமான ஆயுதத்தை பணம் பிடுங்கும் ஏடிஎம் எந்திரமாக கருதிய ஒரு சுயநலமியால் வீழ்த்தப்பட்ட முதல் தமிழ் நடிகரும் பாகவதர்தான்.

# தமிழகத்தின் தங்கம்
# இளவேனில் வாலறிவன்



பிரேசிலில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தங்கம் வென்று அசத்தியிருக்கிறார் தமிழகத்தைச் சேர்ந்த இளவேனில் வலறிவன்.

பிரேசிலின் ரியோ டி ஜெனரியோ நகரில் உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 72 நாடுகளைச் சேர்ந்த 541 வீரர், வீராங்கனைகள் இந்த உலகக் கோப்பைத் தொடரில் பங்கேற்று உள்ளனர். அவர்கள் பதக்கத்துக்கு மட்டும் போட்டி போடவில்லை. 2020ம் ஆண்டு டோக்கியோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறலாம் என்பதால் இந்தத் தொடர், அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

நேற்று நடைபெற்ற 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் 251.7 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். இளவேனில், உலகக் கோப்பை தொடரில் இந்தப் பிரிவில் தங்கப்பதக்கம் வெல்லும் 3 வது இந்தியர் ஆவார். முன்னதாக அபூர்வி சந்தேலா, அஞ்சலி பகவட் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.

20 வயதே ஆன வீராங்கனை இளவேனில், சீனியர் பிரிவில் தனது முதலாவது பதக்கத்தை தட்டிச் சென்றுள்ளார். தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் பிறந்தவர் இளவேனில். முன்னதாக முனிச் நகரில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியின் இறுதிச்சுற்றில் 4 வது இடம் பிடித்து பதக்கத்தைத் தவறவிட்டவர் இந்தமுறை அசத்திவிட்டார்.

இளவேனில் சீனியர் பிரிவில் தங்கம் வெல்வது இதுதான் முதல்முறை என்றாலும் ஜூனியர் பிரிவில் இந்தியாவுக்காகத் தங்கப்பதக்கம் பெற்று தந்திருக்கிறார். 2018ம் ஆண்டு நடைபெற்ற ஜூனியர் உலகக் கோப்பைத் துப்பாக்கிச் சுடுதலில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

இளவேனிலுக்குப் பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் பதக்கம் வென்ற ககன் நரங், "தேசிய விளையாட்டு தினம் இனிப்பான தினமாகியுள்ளது. இளவேனில் சீனியர் பிரிவில் தன்னுடைய முதலாவது தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்" என்றார்.

நன்றி : **ஆனந்தவிகடன்**

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



திரைப்பட பின்னணிப் பாடகர் உன்னி மேனன் அவர்களுக்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கலைமாமணி விருதை வழங்கினார். அருகில் தேனிசைத் தென்றல் தேவா.




செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள்சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளராக திரு. ஜெயவேல் அவர்களை சங்கத்தின் தலைவர் திரு. விசவனூர் வே. தளபதிஅவர்கள்நியமித்தார். அருகில் பொதுச்செயலாளர் சிங்காரச் சென்னை ஆசிரியர் திரு. இரங்கநாதன். கூட்டத்தில் துணைத்தலைவர் பாலமுருகன், மத்திய சென்னை மாவட்டத் தலைவர் பத்மனாபன் உட்படபலர் கலந்து கொண்டனர்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

